Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY — தேசிய தினசரி

போன்: 389

மலர் 3 — யாழ்ப்பாணம், சார்வரி மாசி 10-ஆம் நாள் றம்ளான் 5. (21-2-61) செவ்வாய்க்கிழமை — தபாற் பெட்டி எண்: 49 — இதழ் 9




# ‘விடுதலைக்கு முதற்படி’

## மறியல் இயக்கம் பெருவெற்றி

### எஸ். ஜே. வி. திருப்தி

யாழ்ப்பாணம் செவ்வாய்

**“தமிழன் அடங்கி ஒடுங்கி வாழமாட்டான். அவன் விடுதலைக்கு வித்திட்டுவிட்டான். எமது முதல் நாள் மறியல் இயக்கம் இதனை நன்கு எடுத்துக்காட்டியுள்ளது” இவ்வாறு திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் நேற்று மாலை நடைபெற்ற பொதுக் கூட்டத்திற் கூறினர்.**

“இப்போதுள்ள அரசியல் நிலையில் தமிழ்ப்பேசும் மக்களுக்கு நேரடி நடவடிக்கையைத் தவிர வேறு வழியில்லை” என்று தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் நேற்று மாலை யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கூறினர்.

நேற்றுக் காலை நடைபெற்ற மறியல் இயக்கத்தின் பின் நிகழ்ந்த இக் கூட்டத்தில் பொலிசாரின் தடியடிப் பிரயோகத்தினுல் காயமடைந்த உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கமும், மற்றும் இரண்டொருவரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆண்களும் பெண்களுமாக மண்டபத்தின் உள்ளேயும் வெளியேயும் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசுகையில் கூறியதாவது:-

இன்று ஒரு பெரிய தினம். இன்று நடைபெற்ற மறியல் இயக்கத்தில் பொது மக்கள் நடந்துகொண்ட விதம் பூரண திருப்தியளிக்கிறது. எமது தொண்டர்கள் சாத்விகத்திலிருந்து சிறிதும் விலகாமல் நடந்துகொண்டனர்.

எமது இனத்தை அழிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. அரசாங்கத்துடன் இந்த நடவடிக்கையை எதிர்த்துப் பேச்சளவில் நின்றுவிடாமல் செயலில் இறங்கியுள்ளோம். எமது எதிர்ப்பு நடவடிக்கைக்குப் போதிய அளவு ஆதரவு பொது மக்களிடமிருந்து கிடைத்துள்ளது. தேவையான அளவு தொண்டர்களும் சேர்ந்துகொண்டிருக்கிறர்கள்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தொகுதியைச் சேர்ந்த தொண்டர்கள் தான் மறியல் இயக்கத்தில் ஈடுபட வேண்டுமென்று நாங்கள் ஒழுங்கு செய்திருந்தோம். இன்று காங்கேசன் துறைத்தொகுதியைச் சேர்ந்த தொண்டர்கள் தான் இயக்கத்திலீடுபடுவதாக இருந்தபோதிலும் மற்றத் தொகுதிகளையும் சேர்ந்த தொண்டர்களும் கலந்துகொண்டனர்.

### தொண்டர்களுக்கு பாராட்டு

போதியளவு தொண்டர்கள் இன்றைய மறியல் இயக்கத்தில் கலந்துகொண்டனர். தொண்டர்கள் நடந்துகொண்ட விதம் பாராட்டத்தக்கது. பொலிசார் எவ்வளவு தவறான முறையில், ஆயுதங்களை உபயோகித்து தொண்டர்களைத் தாக்கிய போதிலும் தொண்டர்கள் பலாத்காரத்தில் இறங்காது அகிம்சையை அனுஷ்டித்தது பாராட்டவேண்டியது.

(5-ம் பக்கம் பார்க்க)

## போனவர் திரும்பினர்

கொழும்பு

கள்ளத்தனமாக இலங்கை வந்த ஒருவருக்கு கொழும்பு தற்காலிக பிரதம நீதிபதி திரு விஷயசேகர, ரூ 500 அபராதம் விதித்தார். எதிரியான என். ராஜசேகரன் தான் குற்றவாளி என்று ஒப்புக்கொண்டார்.

புறக்கோட்டை போலிஸ் இன்ஸ்பெக்டர் ஆரிய பெரேரா அளித்த வாக்குமூலத்தில் சென்ற வருடம் நவம்பர் மாதம் 2-ந் திகதி எதிரியை செட்டியார் தெருவில் கைது செய்ததாயும் 1957-ம் வருடம் அவர் பிரதமரின் உத்தரவால் நாடுகடத்தப்பட்டதாயும் மீண்டும் அவர் கள்ளத்தனமாக இலங்கை வந்துள்ளதாயும். வெளியேற்ற உத்தரவு கிடைக்கும்வரை அவர் கும்பெனித் தெரு பொலிஸ் முகாமில்வைக்கப்பட்டிருப்பதாயும் கூறினர்.

# இன்று இயக்கம் விரிவடையும்

## மட்டக்களப்பிலும் ஆரம்பமானது

யாழ்ப்பாணம், செவ்வாய்

தமிழரசுக் கட்சி நேற்று ஆரம்பித்த மறியல் இயக்கம் இன்று காலை மீண்டும் ஆரம்பமாகுமென்றும் இன்றும் கச்சேரியிலேயே நடைபெறுமென்றும் தெரியவருகிறது.

இன்றைய இயக்கத்துக்கு திரு. வி. ஏ. கந்தையா தலைமை வகிப்பாரென்றும் தொண்டர்கள் தொகை சிறிது கூடுதலாக இருக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று தொண்டர்கள் தாக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டிருந்த திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் கண்ணீர்விட்டபடி போராட்டத்தில் குதிக்க முன் வந்த போது அவரைத் தடுத்து திருமதி வன்னியசிங்கம் வீட்டுக்கு அனுப்பிவைத்தனர். பின்னர் இப்படி உணர்ச்சி வசப்படக்கூடாதென்று திரு. செல்வநாயகமும் மற்றும் பலரும் புத்திமதி கூறினராம்.

விரைவில் பெண் தொண்டர்களையும் மறியல் இயக்கத்தில் சேர்த்துக்கொள்ள ஆவன செய்வதாக திரு. அமிர்தலிங்கம் பின்னர் தெரிவித்தார்.

நேற்றுக் காலையில் நடைபெற்ற மறியல் இயக்கத்தின் பின் பலர் தமிழரசுக்கட்சியின் காரியாலயத்துக்குச் சென்று தொண்டர்களாகப் பதிவு செய்துகொண்டனர்.



வி. ஏ. கந்தையா

### மட்டக்களப்பில் ஆரம்பம்

மட்டக்களப்பில் நேரடி நடவடிக்கையின் முதலாவது அம்சமான வேண்டுகோள் இயக்கம் நேற்று ஆரம்பமானது.

தமிழரசுத் தலைவர் திரு. இராசமாணிக்கம், திரு. இராசதுரை ஆகியோரும் மற்றும் பல தொண்டர்களும் இதில் ஈடுபட்டிருந்தனர். தங்கள் வேண்டுகோளுக்கு நல்ல ஆதரவு கிடைத்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

## புதுடில்லியில் ரஷ்யா உதவி பிரதமர்

புதுடில்லி

சோவியத் முதல் உதவித் துணைப் பிரதமரான திரு. கோஸிகன் இந்தியாவில் 12 நாள் சுற்றுப்பிரயாணம் செய்யும் பொருட்டு நேற்று புதுடில்லி வந்து சேர்ந்தார். இந்தியப் பிரதமர் திரு. நேருவின் அழைப்பின்பேரில்வந்திருக்கும் திரு. கோஸிகனுடன் வெளிநாட்டு மந்திரி திரு. புஷ்கினும் வந்திருக்கிறர்.

---

## இலங்கை தீர்மானத்துக்கு நேரு ஆதரவு

புதுடில்லி

சீனர்கள் பாரதத்தில் ஆக்ரமித்திருக்கும் பகுதியிலிருந்து வெளியேறினுல் மட்டுமே எல்லைப்பிரச்னைக்கு தீர்வு காண முடியும் என பிரதமமந்திரி திரு. நேரு கூறினர். சீனப் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்துவதனுல் ஏதாவது பலன் இருக்கும் எனக் கண்டால் ஒளிய தான் பீகிங் போகப்போவதில்லை என்றும் அவர் கூறினர்.

காங்கோ பற்றிக் குறிப்பிடுகையில் இலங்கை, லீபியா, ஐக்கிய அராபியக் குடியரசு ஆகியமூன்றுநாடுகளும் பந்தோபஸ்து சபையில் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை சபை ஏற்றுக்கொள்ளுமென நம்புவதாயும், ஷோம்பே, மொபுடு ஆகியோரின் தலைமையிலுள்ள ராணுவத்தினரின் ஆயுதங்களைப் பறித்து, ஐ. நா. அங்கு செயலாற்ற வேண்டுமெனவும் நேரு கூறினர்.

# இந்திய - சீன எல்லைத் தகராறு

## பார்லிமெண்டில் நேரு பிரஸ்தாபம்

புதுடில்லி

ஜம்மு காஷ்மீருக்கு இடையிலுள்ள எல்லைப் பிரதேசம் சம்பந்தமாக பாகிஸ்தானும சீனவும் அறிக்கைள் வெளியிட்டிருப்பதுபற்றி இந்திய பாலிமெண்டில் பிரதம மந்திரி நேரு குறிப்பிட்டார்.

இந்த விஷயத்தை ஐ. நா. பந்தோபஸ்துசபைக்குச் சமர்ப்பிப்பதுபற்றி ஆலோசிக்கப் படலாம் என்று அங்கத்தவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் நேருஜி கூறினர்.

சீன - இந்தியத் தகராறுகள் சம்பந்தமாக அடிக்கடி சீனத்திடம் ஆட்சேபம் தெரிவித்துத் தான்வருகிறதெனவும் இந்த விஷயம்பற்றி ஆட்சேபம் தெரிவிக்கவேண்டிய பிரச்னை எழவில்லையென்றும் நேருஜி கூறினர்.

பாகிஸ்தான் அரசாங்கத்திடம் பாரதம் விளக்கம் கோரியுள்ளதாகவும் ஆனல் இதுவரை பதில் கிடைக்கவில்லையென்றும் திரு. நேரு சொன்னர்.

மேற்கொண்டு இந்த விஷயம் சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி அரசாங்கம் ஆலோசிக்கும் என்று ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் பிரதமர் குறிப்பிட்டார்.

# தியாகம் அவசியம்

## அரசாங்க ஊழியருக்கு வற்புறுத்து

கொழும்பு

அரசாங்க ஊழியர்களின் மொழிஉரிமை பற்றி விவாதிக்குமுகமாக சுமார்1500 தமிழ் அரசாங்க ஊழியர்கள், வெள்ளவத்தை சைவமங்கையர் கழகத்தில் கூடினர்கள்.

வருங்கால தமிழ் அரசாங்க ஊழியர்களின் சுயகௌரவம், உரிமைகள் ஆகியவற்றைப் பாதுகாக்குமுகமாக இஸ்ரேலிய யூதர்களைப் போல் தியாகம் செய்ய முன்வரவேண்டுமென கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு. ஆர். பாலசிங்கம் கூறினர்.

---

## ஒருதொன் எடையுள்ள செயற்கை கிரகம்

ஒரு தொன் எடையுள்ள செயற்கை கிரகம் அமெரிக்கா வானவெளிக்கு அனுப்பியிருக்கிறது. ‘21-வது டிஸ்கவரர்’ எனப்படும். இச் செயற்கைக் கிரகம் பூமியின் வெப்பத்தைப் பற்றிய தகவல்களைத் தெரிவிக்கக் கூடியதென அறிவிக்கப்பட்டது.

## பாரபட்சமற்ற விசாரணை தேவை

புதுடில்லி,

இன்று புதுடில்லியில் கூடிய காங்கிரஸ் காரியக்கமிட்டி திரு லுமும்பாவும், அவரது தோழர்களும் படுகொலை செய்யப்பட்டதுபற்றிப் பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. காங்கோவில் கவலைக்கிடமான நிலைமை நிலவுவதாயம், அதனல் உலக சமாதானத்திற்கே ஆபத்து ஏற்பட்டிருப்பதாயும காங்கோ துருப்புக்களை நிராயுதபாணிகளாக்குவதுடன் அங்குள்ள அன்னியத் துருப்புக்களை- குறிப்பாக பெல்ஜியம் துருப்புக்களை காங்கோவிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்றும் தீர்மானம் கூறுகிறது.

## வானொலிநிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

செவ்வாய், 21-2-61

காலை 6-45 உதயகீதம் 6-50 சைவநற்சிந்தனை 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை 7-15 தேர்ந்த இசை 7-30 திரை இசை 8-00 வயலின் 8-15 இஸ்லாமிய கீதங்கள்

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள் 5-45 திரை இசை* 6-15 பாங்கு 6-30 கிராம சஞ்சிகை

இரவு 7-00 மெல்லிசை 7-30 ‘றேடியோ டாக்டர்’ பேச்சு 7-45 ஆகாசவாணிஅஞ்சல் 8-45 இஸ்லாமிய நிகழ்ச்சி 9-15 இஸ்லாமிய நிகழ்ச்சிகள் 1-00 நாகஸ்வரம்

*செங்கடகல உபநிலையத்தில் அஞ்சல்

### திருச்சி

(செய்திகள் காலை 7-15 பகல் 2-00, இரவு 7-15)

காலை 7-34 ஹரிகேசவநல்லூர் வி. சுந்தரம் பாட்டு

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு 1-00 கதம்பம் 2-10 உயர்தரபள்ளிகளுக்கு

மாலை 4-45 விவிதபாரதி கர்நாடக சங்கீதம் 9-15 கிராம நிகழ்ச்சிகள்

இரவு 7-30 சென்னை அஞ்சல் 7-45 மதுரை மாரியப்ப சுவாமிகள் பாட்டு 9-15] ‘தண்டனை’ நாடகம் 6-45 சென்னை அஞ்சல்

## நம்பிக்கையில்லாத் தீர்மானம்

கொழும்பு

எதிர்க்கட்சிகள் கொண்டுவரவிருக்கும் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் இன்று (செவ்வாய்) பிரதிநிதிகள் சபையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

—

## 20-வது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்

கொழும்பு ஸ்ருடியோவின் 20-வது ஆண்டு நிறைவு விழாவின்போது பொலிஸ்மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பலர் கலந்து கொண்டனர்

விளையாட்டுப்போட்டிகளுக்கு யாழ்ப்பாணம் ஏ.எஸ்.பி. திரு ஏ. மகேந்திரன் தலைமை வகித்தார். அன்று மாலை நாடகப் போட்டியும் நடைபெற்றது.

பரிசு பெற்றவர்களின் விபரம் வருமாறு:-

25 மைல் ஆண்கள் சைக்கிள் ஓட்டப்போட்டி:- ச. நகுலேஸ்வரன் அராலிஅல்பினைசைக்கிள் கிளப். 5 மைல்பெண்கள் சைக்கிள் போட்டி செல்வி குலேரப்ரன், வேம்படி மகளிர் கல்லூரி. நாடகம் கோப்பாய் கலைவளர்ச்சிக்கழகம்.

—

## இந்தியா வரும் சோவியத் பிரதமர்

புதுடில்லி

இந்தியப் பிரதமர் திரு. நேருவின் அழைப்பிற்கிணங்க சோவியத் முதல் உதவிப் பிரதமர், புதுடில்லிக்கு விஜயம் செய்யும் பொருட்டு மாஸ்கோவிலிருந்து புறப்பட்டார்.

## முதல் நாள் இயக்கம் முடிந்தது

நேற்று காலை ஆரம்பித்த மறியல் இயக்கம் நேற்று நண்பகல் 12 மணியுடன் முடிவடைந்தது. தொண்டர்களும் தலைவரும் ஊர்வலமாகக் கட்சிக்காரியாலயத்திற்குத் திரும்பினர். இன்று காலை மீண்டும் ஆரம்பமாகும்.

—

## சுவாமி ஞானப்பிரகாசர் தினம்

யாழ்ப்பாணம்

சுவாமி ஞானப்பிரகாசரின் பதினான்காவது ஆண்டு நினைவு நாள் இம்மாதம் 26-ம் தேதி கொண்டாடப்படவிருக்கிறது. அன்றையதினம் யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் பண்டிதர் கா.பொ. ரத்தினம் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெறும். அடிகளின் உருவப்படங்களும் விழாவின்போது விநியோகிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

—

## டி'மெல்லுக்கு மீண்டும் பதவி?

ரெயர் - அட்மிரல் ரொய்ஸ் டி'மெல் மீண்டும் கடற்படை தளபதியாக நியமிக்கப்படக் கூடுமென்று கடற்படை வட்டாரங்களில் வதந்திகள் உலாவுகின்றன. ஆனால் அதுபற்றி அதிகாரப்பூர்வமான செய்தி ஏதும் கிடைக்கவில்லை.

இப்போது கடற்படையினர் மீது சுமத்தப்பட்ட கள்ளக் கடத்தல் குற்றச்சாட்டுகளின் காரணமாக திரு. மெல் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

# குறைந்த செலவில் தொழிலாளர் வீடுகள்

கொழும்பு

உள்நாட்டுப் பொருள்களைக் கொண்டு குறைந்த செலவில் தொழிலாளர், மத்திய தர வகுப்பினர்களுக்கான வீடுகள் ஏராளமாகக் கட்டுவது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது பெரிய வீடுகள் கட்டும் நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்காமல் விடுவது பற்றியும் அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

வீடு கட்டுவதற்கான கடன் வசதிகள் ஒரு மத்திய ஸ்தாபனத்தின் மூலம் கிடைப்பதற்கு, வழி செய்வது, அபிவிருத்திச் செய்யப் படாமல் கிடக்கும் நிலங்களை வீடுகள் கட்டுவதற்காக நிர்ப்பந்தமாக விலைக்கு வாங்குவது, வீடுகட்டத் தேவைப்படும் ஓடுகள், செங்கற்கள் போன்ற பொருள்கள் அதிகமாக உற்பத்தி செய்வது தொழிலாளருக்கும் மத்தியதரக்குடும்பங்களுக்கும் பயன்படும் வகையில் வீடுகள் கட்ட ஸ்தல ஸ்தானங்களுக்கு உதவிகள் அளிப்பது ஆகிய விஷயங்கள் பற்றி அரசாங்கம் ஆலோசனை நடத்திவருகிறது

கிரிக்கட்

## ஐயனார் கோவிலடி ஜனசமூகநிலையம் வெற்றி

யாழ்ப்பாணம்

ஐயனார் கோவிலடி ஜனசமூக நிலையத்திற்கும் ஓட்டுமடம் ஜனசமூக நிலையத்திற்குமிடையில் நடைபெற்ற வருடாந்த கிரிக்கட் விளையாட்டுப் போட்டியில் ஐயனார் கோவிலடி ஜனசமூக நிலையம் மூன்று விக்கட்டுகளால் வெற்றி பெற்றது. ஓட்டுமடம் ஜனசமூகநிலையக்கோவிலடி முதலில் துடுப்பெடுத்தாடியது. ஆனால் 41 ஓட்டங்களுடன் வெளியேற்றப் பட்டுவிட்டது.

போட்டியில் ஐயனார் கோவிலடி ஜனசமூக நிலையக் கோஷ்டியைச் சேர்ந்த எஸ். பொன்னம்பலம் ஆகக் கூடுதலான ஓட்டங்களை எடுத்தார். இவர் 25 ஓட்டங்கள் எடுத்தும் ஆட்டத்தை இழக்கவில்லை.

இவ்வருடம் ஜனசமூக நிலயங்களுக்கிடையில் நடைபெற்ற முதலாவது கிரிக்கட் விளையாட்டுப் போட்டி இதுதான் என்று அறிவிக்கப்படுகிறது.

## தமிழர் பண்பாடு திரு. அலன் பாராட்டு

ஊர்காவற்றுறை

தீவுப்பகுதிப் பாடசாலைகளுக்கான கலைவிழா தீவுப்பகுதித் தமிழாசிரியர் சங்க ஆதரவில் வேலணை அரசினர் மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான கலாச்சார தாபனத்தை (யுனஸ்கோ) சேர்ந்த திரு. அலன் தலைமை வகித்தார். அவர் தமது உரையில் தமிழர் பண்பாட்டின் சிறப்பைப் பற்றிப் பெரிதும் பாராட்டினர்.

உதவி வித்தியாதிகாரி திரு. இரத்தின நவரத்தினம் பேசும்போது கலை வளர்ச்சியின் அவசியத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்.


சுகவீனத்திற்குப் பிறகு துரித ஆரோக்கியத்தை அளிக்கவல்லது




துரித சுகம் மருந்தினால் மட்டுமன்றி விரைவாகவே உடல் தேர்தலிலும் தங்கியிருக்கிறது. இழந்த பலத்தை துரிதமாகப்பெற உடலுக்குப் பிரத்தியேக போஷாக்குச் சக்தி அவசியமாகின்றது. சரீர வலிவுக்கும் வனப்பிற்கும் தேவையான ஊட்டச்சத்துக்களும் நெஸ்டோமோல்ட்டில் அபரிமிதமாக உள்ளபடியால துரித நிவாரணத்திற்குத் தேவையான பிரத்தியேகப் போஷாக்குச் சக்தியை அளிக்கக் கூடியதாகவிருக்கின்றது.

# நெஸ்டோமோல்ட்

மோல்டட் மில்க்

# பொலிசார் தாக்கியதற்கு ஆட்சேபம்

## விசாரணை நடத்த அரசாங்க ஊழியர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் கச்சேரிமுன் தமிழரசுக்கட்சித் தலைவர்களும், தொண்டர்களும் 'மறியல் இயக்கம்' நடத்திய போது கச்சேரி ஊழியர்கள் பலர் உள்ளே போகமுடியாது வெளியே நின்றனர்.

அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தா வெளியே போவதைத்தடுத்து வாசலில் படுத்து மறியல் செய்த தொண்டர்களை பொலிசார் தடியால் அடித்துத் தாக்கியபோது மறியல் இயக்கத்தை எதிர்ப்பக்கத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்த மக்கள் சிலர் ஆவேசமடைந்து ஆரவாரம் செய்தனர்: சிலர் கற்களை வீசினர்.

பொலிசார் சிலர் அங்கிருந்த கற்கும்பல் மீது ஏறி மளமளவென கற்களை எடுத்து மக்கள் மீது வீசினர். பின்னர் தடியடிப் பிரயோகம் செய்தும், ஆகாயத்தை நோக்கி வேட்டு வைத்தும் கூட்டத்தைக் கலைத்தனர்.

உள்ளே போக முடியாது வெளியிலே காத்து நின்ற அரசாங்க ஊழியரும் பொலிசாரின் தாக்குதலுக்காளானார்கள்.

பொலிசாரின் செய்கைக்கு ஆட்சேபம் தெரிவித்து அரசாங்க குமாஸ்தாக்கள் சங்க யாழ்ப்பாணக் கிளைச் சங்கம் பிரதம மந்திரி, நிதிமந்திரி, பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், குமாஸ்தாக்கள் சங்கக் காரியதரிசி ஆகியோருக்குத் தந்தி அனுப்பியது.

"காரியாலய மைதானத்தில் நின்ற ஒன்றுமறியாத அரசாங்க ஊழியர்மீது பலாத்காரம் பிரயோகித்த பொலிசாரின் நடவடிக்கையை யூனியன் கடுமையாக ஆட்சேபிக்கிறது. உடனடியாக விசாரணை நடத்த வேண்டுமெனக் கோருகிறோம்" என்று அத்தந்தியில் கண்டிருந்தது.

### கயரோகத்தை தடுக்கமுடியும்

அனுராதபுரம்

"அறியாமையும், வெட்கமும் கயரோகம் பரவுவதற்குக் காரணமாயிருக்கின்றன" என இலங்கை கயரோகத் தடுப்புச் சங்கத் தலைவர் டாக்டர் ஜே. எச். எப். ஜயசூரியா கூறினார்.

'கயரோகம் தடுக்கப்பட முடியாததல்ல. ஆரம்பக்கட்டத்தில் சுலபமாய் அதைத் தடுக்கலாம். நவீன விஞ்ஞானத்திற்கு அதனால் நாம் கடமைப்பட்டிருக்கிறோம்'.

"வெட்கத்தின் காரணமாக நோயாளிகள் தங்கள் வியாதியைச் சொல்வதில்லை. வியாதி முற்றியவுடன் சிகிச்சைக்கு முன்வருகிறார்கள்" என்றும் அவர் கூறினார்.

### சிலைக்கு காவல்

கண்டி

கண்டி, வார்டு வீதியிலுள்ள கவர்னர் வார்டின் சிலையை கடந்த சனிக்கிழமை முழுதும் ஆயுதப் பொலிசார் காவல் புரிந்தனர். பிரஸ்தாப சிலை உடைக்கப்படும் என்று தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

### பாக்தாத்தில் இலங்கை வர்த்தக தூது கோஷ்டி

கொழும்பு

திரு. டி. பி. இலங்கரத்ன தலைமையில் மத்திய கிழக்கு சென்றிருக்கும் இலங்கை வர்த்தகத் தூதுக்கோஷ்டி ஈராக் போய்ச் சேர்ந்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது. திரு. இலங்கரத்தின, பாக்தாத்தில் நிருபர்களிடம் பேசுகையில் பொருத்தமான ஒரு தருணத்தில் ஈராக் பிரதமர் மேஜர் ஜெனரல் கரீம் காஸிமை இலங்கைக்கு விஜயம் செய்யும்படி ஏற்கனவே அழைப்பு விடுக்கப்பட்டதாய்க் கூறினார்.

### சட்டவிரோத குடியேற்றம் அதிகரிக்கிறது

மன்னார்

சென்ற இரு தினங்களில் மன்னார் மாவட்டத்தைச்சேர்ந்த அச்சன்குளம், வங்காலை, பாலகமுனை ஆகிய இடங்களில் 98 சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் கரையிறங்கியதாயும் அவர்களில் 39 பேர் மட்டுமே கைது செய்யப்பட்டிருப்பதாயும் தெரிகிறது.

### கரைக்கு நீந்திவந்தோம் மாஜிஸ்ட்ரேட்முன் சாட்சியம்

காங்கேசன்துறை

தான் எவ்விதம் சட்டவிரோதமாக இலங்கையில் பிரவேசித்தார் என்பதை ஏ. முருகையா கவுண்டர் என்பவர் மல்லாகம் மாஜிஸ்ட்ரேட் முன் விளக்கினார்.

இது சம்பந்தமான வழக்கில் தெல்லிப்பளையைச் சேர்ந்த கோவிந்தநாயர் என்பவர் மூன்று சட்டவிரோதமாகக் குடியேறியவர்களைத் தமது தேநீர்க்கடையில் வேலைக்கு அமர்த்தியிருந்ததாய்ப் போலிசார் குற்றஞ்சாட்டியிருந்தனர். தானும் மற்றும் 15 பேரும் கட்டுமரம் ஒன்றில் தென்னிந்தியாவிலுள்ள புஷ்பவனத்திலிருந்துவந்ததாயும் அடுத்த நாள் வல்வெட்டித்துறையைச் சமீபித்தபோது தங்களை நிர்ப்பந்தமாக இறக்கி விட்டுவிட்டு படகுக்காரர்கள் இந்தியா சென்றுவிட்டதாயும், பின் அனைவரும் கரைக்கு நீந்தி வந்ததாயும் முருகையா கவுண்டர் மாஜிஸ்ட்ரேட் முன் கூறினார். இறுதியில் தான் கோவிந்தநாயர் கடையில் வேலைக்கமர்ந்ததாயும், ஒரு மாதத்தில் பொலிசார் தங்களைக் கைது செய்தனரென்றும், தான் கள்ளத்தனமாகப் பிரவேசித்தவர் என நாயரிடம் கூறவில்லை என்றும் அவர் கூறினார்.

சட்டவிரோதக் குடியேற்றக்காரர் எனத் தெரியாமல் அவர்களை வேலைக்கமர்த்தியதாய்க் கருதி மாஜிஸ்ட்ரேட் நாயரை விடுதலை செய்தார்.

### பஸ் கட்டண உயர்வுக்கு எதிர்ப்பு

இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ் கட்டணத்தை அதிகரிக்க முடிவு செய்திருப்பதை வடமராட்சிப் பகுதி சமசமாஜவாலிபர் சங்க சம்மேளனத்தின் பொதுக் கூட்டம் வன்மையாகக் கண்டித்து பிரதம மந்திரி. இலங்கைப் போக்குவரத்து மந்திரி, இலங்கைப் போக்குவரத்துச் சபைத் தலைவர் ஆகியோருக்குத் தந்தி அனுப்பதீர்மானித்திருக்கிறது.

இந்தச் செய்தியை சம்மேளனக் காரியதரிசி வே.பாலசிங்கம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார். சபை அங்கத்தினராகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் ஆர்.ஆர். தர்மரத்தினம். உப தலைவர் எம். பி. அண்ணைச்சாமி. செயலாளர் வி. பாலசிங்கம். தனதிகாரி எஸ். முருகேசு.

இவர்களுடன் துன்னாலை உடுப்பிட்டி, வதிரி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை புலோலி, அல்வாய், நவிண்டில் ஆகிய சமசமாஜ வாலிபர் சங்கங்களின் தலைவர்களும் காரியதரிசிகளும் நிர்வாக சபையில் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

### அட்லீ புறப்பாடு

கொழும்பு

முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் அட்லி பிரபு இன்று இந்தியாவுக்குப் புறப்பட்டார். 28-ம் தேதி அவர் இலங்கைக்கு வருகிறார்.

### வட கொழும்பில் சிவராத்திரி விழா

கொழும்பு

வட கொழும்பு இந்து பரிபாலன சங்கத்தின் ஆதரவில் கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீமத் அருணாசலேஸ்வரர் சுவாமி கோவில் மகாசிவராத்திரி விழா சங்கத் தலைவர் திரு. வை. முத்துக்குமாரசாமி தலைமையில்கொண்டாடப்பட்டது.

டாக்டர் நல்லநாதன், பண்டிதர் சி. சுப்பிரமணியம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். இன்னிசை நிகழ்ச்சிகளும் மணி பாகவதரின் கதர்காலாட்சேபமும் ஏற்பாடாகியிருந்தன.

### மகாராணிக்கு திருக்குறள் அன்பளிப்பு

சென்னை

சென்னைக்கு விஜயம் செய்துள்ள எலிசபெத் மகாராணிக்கும் அவரது கணவருக்கும் சென்னை கவர்னர் நேற்று ஒரு விருந்துபசாரம் நடத்தினார்.

மகாபலிபுரம் போன்ற ஒரு சிறு கோயில், திருக்குறள் நூல், ஒரு நடராஜர் சிலை ஆகியவை மகாராணிக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது. கோமகனுக்கு வேலைப்பாடமைந்த ஒரு சுருட்டுப் பெட்டி வழங்கப்பட்டது.

## அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வை தடுக்க நடவடிக்கை

கொழும்பு

உள்நாட்டு உற்பத்தி, இறக்குமதிச் சாமான்கள் ஆகியவற்றின் விலை உயர்வைத் தடுக்குமுகமாக, அரசாங்கத்தையும் தனிப்பட்ட வர்த்தகப் பிரதிநிதிகளையும் கொண்ட 4 குழு அமைக்கப்பட்டிருக்கின்றன.

இறக்குமதி, உள்நாட்டு உற்பத்தி துணிகளுக்கு ஒன்றும், உள்நாட்டு உற்பத்தி, இறக்குமதி உணவுப் பொருளுக்கு ஒன்றும், அத்தியாவசிய வீட்டுப் பாவனைச் சாமான்களுக்கு ஒன்றும், மோட்டார் துணைக் கருவிகளுக்கு ஒன்றுமாக நான்கு குழு செயலாற்றுகின்றன.

ஜனவரி 25-ந் திகதி கட்டணம் அதிகரிக்கப்பட்ட தினத்துக்கு முன்பிருந்த கையிருப்பு, இப்போதுள்ள கையிருப்பு ஆகியவற்றை அவர்கள் அறிவிப்பார்கள்.

சிங்கள, தமிழ் புது வருடத்திற்கு முன்பு விலைகளை ஒரு நிர்ணயத்திற்குக் கொண்டுவருவதே இக்கமிட்டிகளின் பிரதான அலுவலாகும்.

## சுங்க விசாரணைக்கு வருமாறு கதிர்காமருக்கு உத்தரவு

### ரூ.4000 பெறுமதியான புகைப்பட கருவியே காரணம்

கொழும்பு

இலங்கைக் கடற்படையின் தற்காலிக தளபதி இராஜன் கதிர்காமர் சுங்க இலாகா உதவி கலெக்டர் திரு. ஏ. இரத்தினத்தின் முன் பிரசன்னமாகுமாறு பணிக்கப்பட்டிருக்கிறார். இப்போது சுங்க இலாகாவின் பொறுப்பிலிருக்கும் ரூ. 4000 பெறுமதியான புகைப்படக்கருவி சம்பந்தமாகவே சுங்க இலாகா விசாரணைக்கு அவர் உட்படுத்தப்பட்டிருக்கிறார்.

மார்ச் மாதம் இந்த விசாரணை நடைபெறவிருக்கிறது. மற்றும் மூன்று கடற்படை அதிகாரிகள் சாட்சிகளாக வருமாறு அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

குறித்த புகைப்படப் கருவி, திரு. கதிர்காமரின் உத்தரவுப்படி, தூரகிழக்கு கடற்படை யாத்திரையின் போது வாங்கப்பட்டதாய்க் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. பின் அது, சுங்க இலாகா பிரதம கலெக்டரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

### ரேஷன் புத்தக மோசடி

கொழும்பு

ரேஷன் புத்தகத்தில் நடைபெறும் மோசடி இன்னும் தொடர்ந்திருக்கிறதென உணவுக் கமிஷனர் சமர்ப்பித்துள்ள அறிக்கை ஒன்று கூறுகிறது. வாசகால பர்மிட் முடிந்த 3000 பேர்கள் ரேஷன் புத்தகம் பெற்றிருப்பதாயும் அவ்வறிக்கை கூறுகிறது.

### நேருவின் அச்சம்

புதுடில்லி

லுமும்பா ஆதரவாளர்களான 7 தலைவர்கள் கைது செய்யப்பட்டு கஸாங்கா மாகாணத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டதாயும், அவர்கள் ஒருவேளை படுகொலை செய்யப்படக் கூடும் எனத்தாம் அஞ்சுவதாயும் பிரதமர் நேரு காங்கோ பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார்.


## கைத்தறித் துணிகள்

[இந்திய அரசாங்கம்]

### யாழ்ப்பாணக் கிளை

### திறப்புவிழா 24 - 2 - 61

கைத்தறி புடைவைகளுக்குப் பல நூற்றாண்டுகளாகப் புகழ்வாய்ந்த இந்தியா, பருத்தி. பட்டு, புடைவைகளைக் கொழும்பிலுள்ள தனது கைத்தறி புடைவை விற்பனவு ஸ்தாபனத்தின் மூலம் விநியோகம் செய்து வந்திருக்கிறது. நியாயவிலைக்கும், உயர்ந்த ரகத்துக்கும், சிறந்த ரகத்துக்கும், கெட்டிச் சாயத்துக்கும் நீடிய உழைப்புக்கும் இந்தப் புடைவைகள் பெயர்போனவை. உள்ளூர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கென கைத்தறி ஸ்தாபனக் கிளையொன்று 24 - 2 - 61-ல் யாழ்ப்பாணத்தில் திறக்கப்படும்.

இடம்: "அன்னை மண்டபம்"
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

நேரம்: மாலை 6-30 24 - 2 - 61

**இந்திய ஹைகமிஷனர் திரு. பி. கே. கபூர்**
கிளை ஸ்தாபனத்தைத் திறந்து வைப்பார்.

விற்பனை ஆரம்பம்: 25 - 2 - 61

யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள
**ஜுபிட்டர் ஸ்தாபனத்தார்**
யாழ்ப்பாணத்தில் உரிமைபெற்ற
கைத்தறி புடைவை விற்பனவு பிரதிநிதிகளாக
விளங்குபவர்.

**கைத்தறிகள்**
(இந்திய அரசாங்கம்)

### மணிவாக்கு

உண்மையும் அன்பும் இவ்வுலகிலே மிக வலிமையுள்ள பொருள்களில் இரண்டாகும். இவ்விரண்டும் ஒருங்கே கூடிச் செல்லும்போது. அவற்றை எளிதாக எதிர்த்தல் இயலாது.

—கோட்வேர்த்

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் சார்வரி ஆண்டு மாசி மீ 10உ (21-2-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna, Phone: 389.

## அரசாங்கத்தின் அவசர கடமை

நேற்று யாழ்ப்பாணக் கச்சேரி முன்பாக மறியல் செய்த தமிழரசுக் கட்சித் தலைவர்களையும், தொண்டர்களையும் பொலிசார் தடிகளால் அடித்தது மிகத் தவறான செயலாவதுடன் நிலைமையை மேலும் மோசமாக்குவதாகும். அகிம்ஸா முறையில் அமைதியாக மறியல் செய்பவர்களை பொலிசார் கைது செய்து அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாமேயன்றி, தடியாலடித்து அடக்குமுறையைப் பிரயோகிப்பது நாகரிகச் செயலாகாது.

மொழி உரிமைக்காகத் தமிழரசுக்கட்சி போராடுகின்றது. தங்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட ஓர் அரசாங்கம் அந்த ஒப்பந்தப்படி நடவாமல் தமிழ்மொழிக்குவடக்கு, கிழக்கு மாகாணத்திலும் கூட இடமளிக்காமல் மறுத்துவிட்டதை எதிர்த்து சாத்வீகப் போர் நடத்துகின்றது. அக்கட்சிக்கு மற்றவர்களின் ஆதரவு இல்லை என்றும் தமிழரிடையே ஒற்றுமை இல்லை என்றும் கருதி, இந்தஉரிமைப்போராட்டத்தை தடியாலோ, துப்பாக்கியாலோ அடக்கி ஒடுக்கி விடலாமென்று அரசாங்கம் நினைக்குமாயின் அது பெரும் தவறு!

இப்போராட்ட முறைபற்றிக் கருத்து வேற்றுமை கொண்ட தமிழ் மக்கள் கூட நேற்று அப்போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்குப்பட்ட அடி தங்கள் தமிழனனைக்கும் தங்களுக்கும் பட்ட அடியாகவே உணர்ந்துள்ளனர். அரசாங்கத்தின் அடக்குமுறை இந்த இயக்கத்துக்கு அதிக ஆதரவும், தமிழரிடையே அதிக ஒற்றுமையும் ஏற்படுத்துவதாகவே இருக்கும்.

நிலைமை இப்படியே நீடிக்குமாயின். இது மீண்டும் வகுப்புத்துவேஷத்தை மூட்டி, பயங்கர வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டு நாட்டின் அமைதியையும் முன்னேற்றத்தையும் கெடுக்கும். எக்காரணம் பற்றியும் அரசாங்கம் அதற்கு இடமளிக்கக் கூடாது.

மறியல் இயக்கத்தைஆரம்பிக்கும் முன்னர் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் வெளியிட்ட அறிக்கையில், 'தமிழ் பேசும் இனத்தின் ஏகோபித்த எதிர்ப்பின் காரணமாக காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா வடக்கிலும் கிழக்கிலும் தமிழை நிர்வாக மொழியாகவும், இலங்கையின் இதர பாகங்களில் குறிப்பிட்ட காரணங்களுக்கு உபயோகிக்கவும் கூடியதாக 1957-ம் வருடம் சிங்களம் மட்டும் சட்டத்தை விஸ்தரித்தார். தமிழ்பேசும் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் கட்சியாக எங்களுடன் திரு. பண்டாரநாயக்கா செய்து கொண்ட ஒப்பந்தத்தை அவர் வீட்டைச் சுற்றி முற்றுகையிட்ட புத்த பிக்குகளின் கிளர்ச்சி காரணமாக அடுத்த வருஷம் கிழித்துவிட்டார். இந்த நாட்டிலுள்ள தமிழர் தங்கள் மொழியிலேயே ஆட்சி செய்யப்படலாமென்பதற்கு அந்த ஒப்பந்தமே ஒரு சான்று" என்று எடுத்துக் கூறி திரு. பண்டாரநாயக்காவின் இக் கொள்கையை அவரது மனைவியாரின் அரசாங்கம் கடைப்பிடித்து அமுல் நடத்துமென்று இந்த அரசாங்கத்தின்மீது வைத்த நம்பிக்கைக்கு அரசாங்கம் துரோகம் செய்துவிட்டது எனக் குற்றம் சுமத்துகின்றார்.

தமிழரசுக் கட்சிமட்டும் சென்ற மார்ச் மாதம் சுதந்திரக் கட்சியை ஆதரிக்காமல் இருந்திருப்பின் இன்று அது ஆட்சிக்கு வந்திருப்பதே சந்தேகம். ஆட்சிக்கு வந்தபின் பழைய ஒப்பந்தத்தையும் அளித்த உறுதிமொழியையும் நிறைவேற்றுமல், தங்களுக்குப் பெரும்பான்மை பலம் இருக்கின்றதென்ற எண்ணத்தில் அரசாங்கம் கண்மூடித்தனமாகவும் பிடிவாதமாகவும் காரியம் செய்யுமாயின் அது உண்மை ஜனநாயகத்துக்கு மாருவதுடன், அரசாங்கத்துக்கு தார்மீக பலமே சிறிதும் இல்லாமற் போய்விடும்.

திரு. செல்வநாயகம் கூறியிருப்பதுபோல் நாட்டின் இரு மொழிகளும் இரு அரசாங்க மொழிகளாக 1955-ம் வருடம் வரை இருந்துவந்துள்ளன. இதை மாற்றி தமிழுக்கு உரிமை இல்லாமற் செய்ததால் நாட்டில் ஏற்பட்ட விபரீதங்களை பிரதமர் நன்குணர்வார். இனி மீண்டும் அவ்வித நிலை ஏற்படாமற் தடுக்க, உடன் அரசாங்கம் தமிழுக்கு நியாயமான உரிமை கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நாட்டின் அமைதியிலும் முன்னேற்றத்திலும் அக்கறையுள்ள தேசாபிமானிகள் இச்சமயம் முன்வந்து இக்கிளர்ச்சி விபரீதமாக வளர்வதற்கு முன் அமைதியாக இப்பிரச்னையைத் தீர்க்க முயற்சிகளை எடுக்க வேண்டும். ஒவ்வொரு நாள் தாமதமும் நாட்டுக்கே பெருந் தீங்கு விளைவிக்கும்.

# அங்கோலா விடுதலைக்கு நேரடி நடவடிக்கை

## சுதந்திர இராணுவம் திரட்டப்படலாம்

லண்டனிலே ஆபிரிக்க செய்திப் பிரசுரங்கள் வெளியாகின்றன. அவற்றின்படி, அங்கோலாவில் ஒவ்வொரு வருடமும் 7 லட்சம் பேர் கடூழிய தண்டனை அனுபவித்து வருகிறார்கள். அவர்களில் ஒருலட்சம் பேர், 14 வயதுக்குக் குறைந்த சிறுவர்களாவர். மற்றோர் லட்சம்பேர் வயோதிபர்கள்.

அடிமைத்தனத்தின் கொடுமை பொறுக்காமல் தோட்டங்களிலிருந்து தப்பி ஓடும் ஆபிரிக்கர்கள் பலர். அவர்களைப் பிடிக்க விசேஷ காவல் படை இருக்கிறது. அக்காவற்படையினர், ரஸ்தாக்களில் சுற்றி, தப்பி வருபவர்களைப் பிடிக்கின்றனர். பிடிபட்டவர்கள் ஸோடோம் எனும் மர்மமான மரணத் தீவுக்கு அனுப்பப்படுவர். அங்கிருந்து அநேகமாக யாரும் உயிருடன் திரும்பி வருவது இல்லை.

பேச்சுகளை ஐ. நா. ஸ்தாபனத்தில் சேர்த்தபோது, அதன் நிர்வாகத்திலுள்ள சுயாட்சியற்ற பகுதிகளைப்பற்றிய தகவல்களை அளிக்க வேண்டுமென்று கேட்கப்பட்டது. இந்தக் கோரிக்கையை ஸலாஸரின் அரசாங்கம் நிராகரித்தது. போர்ச்சுகலுக்குக் கலனிகளே கிடையாதென்றும், போர்ச்சுகலும், வெளியிலுள்ள அதன் பகுதிகளும் "ஒரே அரசியல் ஸ்தாபனம்" என்றும் காரணம் கூறினர்.

போர்ச்சுகீய அரசியல் அமைப்பில் ஒரு திருத்தம் செய்யப்பட்டிருப்பதாயும் அதன்படி, அங்கோவா, மொஸாம்பிக் உட்பட வெளிநாடுகளிலுள்ள பகுதிகளெல்லாம், ஒரே ஆபிரிக்க—ஐரோப்பிய ராஜ்யமாகும் என்றும் காரணம் கூறினர்.

இந்தத் திருத்தத்தின்படி ஒவ்வொரு ஆபிரிக்கரும் போர்ச்சுகீய பிரஜையாக உரிமை பெறுவர். அப்படியாகிறவர்களுக்கு "அஸிமிலாடோ" என்று பெயர். ஆனல் அந்த உரிமை பெறுவது சுலபமன்று, போர்ச்சுகீய மொழி தெரிந்திருக்க வேண்டும். நல்ல நடத்தையாக இருப்பதுடன், போர்ச்சுகீய பழக்க வழக்கங்களை நன்கறிந்து அதன்படி நடப்பவராகவும், சில் குறைந்தபட்ச வருமானமுள்ளவர்களாகவும் வேறு பற்பல நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.

இந்த நிபந்தனைகள் மிகக் கடுமையாக இருப்பதால், அதனைப் பூர்த்தி செய்வது பலருக்கும் எளிதல்ல. மொத்தம் 40 லட்சம் அங்கோவா ஆபிரிக்கருள், 10 ஆயிரம் பேர்கள் தான் 'அஸிமிலாடோ' என்ற போர்ச்சுகீய பிரஜைகளாக முடிந்துள்ளது. மற்றவர்கள் "இண்டிஜீனஸ்" என்ற சுதேசிகள். மிருகத்திலும் மோசமாக நடத்தப்படுகின்றார்கள்.

இது ஒரு சூழ்ச்சியான திட்டம். தங்கள் கொடுங்கோல் ஆட்சியை மூடி மறைக்க பொஸாஸர் அதிகாரிகள் கண்டுபிடித்துள்ள தந்திரமிது. அங்கோவாவில் சமீபகாலத்தில் கிளம்பி வரும் குமுறல்களும், கிளர்ச்சிகளும் பற்றி லண்டனில் வெளியாகும் தகவல்களே, போர்ச்சுகீய கொடுங்கோன்மையை நிரூபிக்கப் போதுமானவை.

### புரட்சிகள்

1922-ல் அங்கோவாவை ஆக்கிரமித்ததாக போர்ச்சுகீயர் அறிவித்தனர். இரண்டு வருடங்களுக்குள்ளாக போர்டோ அம்பாயினிலும் 1925-ல் ஆமரிட்ஸிலும் பின்னர் பல்வேறு இடங்களிலும் புரட்சிக் கலகங்கள் ஏற்பட்டன.

லுவாண்டாவிலுள்ள மக்கள் 1959-ம் வருட ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமையை மறக்கவே முடியாது. அச்சமயம், அரசியல் பொலிசார், ஆபிரிக்கர்கள் வசிக்கும் இடங்களுக்குச் சென்று சூறையாடி, அங்கோலா சுதந்திரத்துக்குப் போராடும் பலரைக் கைது செய்தனர். தலைநகரில் மட்டும் 150 பேர் சிறைபிடிக்கப்பட்டனர். அன்றே லிஸ்பனில், அங்கோலா தேசியத் தலைவரான இலிடியோ மசாடோவையும் கைது செய்தனர். போர்ச்சுகீய அரசாங்கத்துக்கு எதிராக சதி செய்ததாக அவர்கள்மீது குற்றம் சாட்டப்பெற்றது.

1960-ம் வருஷ ஆரம்பத்தில் டுனிஸில் நடந்த இரண்டாவது ஆபிரிக்க மக்கள் மகாநாட்டில், போர்ச்சுகீய காலனிகள் விடுதலைக்காக ஒரு ஆபிரிக்க புரட்சி முன்னணி அமைக்கப்பட்டது. அங்கோலா, மொஸாம்பிக், கினியா முதலிய ஆபிரிக்காவிலுள்ள பல போர்ச்சுகீய காலனிகளிலிருக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஸ்தாபனங்கள் இதில் சேர்ந்துள்ளன.

கைது செய்யப்பட்ட சுதந்திர வீரர்களை விடுதலை செய்ய பெரிய கிளர்ச்சி நடந்தது. பொதுஜன அபிப்பிராயம் பெரிதும் பலப்படவே, இந்த வழக்கை விசாரிக்க தங்களுக்கு அதிகாரமில்லை என்று கோர்ட்டார் அறிவிக்கவேண்டியதாயிற்று.

ஆனல் அடக்குமுறை நிற்கவில்லை. ஜூன் மாதம் மற்றும் 52 பேரைக் கைது செய்தனர். பியி சிறை முகாமில் அடைக்கப்பட்ட சுதந்திர இயக்கத் தலைவர்களில் பலரை "காணவில்லை" என்று அறிவித்துள்ளனர்.

"மாஞ்செஸ்டர் கார்டியன்" பத்திரிகை நவம்பர் 30-ல் எழுதியிருப்பதாவது: பல கைதிகள் கொல்லப்பட்டுள்ளனர். சிலரை லுவாண்டா இராணுவச் சிறையின் முற்றத்தில் வைத்துச் சுட்டுக்கொன்றனர். சிலரை விமானத்தில் ஏற்றிச் சென்று அட்லாண்டி நடு சமுத்திரத்தில் மிக உயரத்திலிருந்து தள்ளிவிட்டுச் சென்றனர்."

அகோஸ்டினேரேடோ என்பவர் ஒரு கவிஞர், வைத்தியர். தமது ஆபிரிக்க மக்களின் உரிமைக் குரலை எழுப்பியவர். அவர் கைது செய்யப்பட்டதை அறிந்ததும், அவரது கிராம மக்கள், கச்சேரி வாசலில் சென்று ஆர்ப்பாட்டம் செய்தனர். துருப்புகள் வந்து சுட்டன. 30 பேர் மாண்டனர். 300 பேருக்குக் காயம். மறுநாள் அந்த கிராமமே அழித்து நாசமாக்கப்பட்டது!

அடக்குமுறை அங்கோலா மக்களின் சுதந்திர உணர்ச்சியை அடக்கவில்லை. அங்கோலா தேசிய விடுதலை இயக்கக் காரியதரிசி விரியாடோடாகுருஸ், லண்டன் பத்திரிகை நிருபரிடம் கூறியதாவது:-

அங்கோலிய தேசாபிமானிகள் தங்கள் நாட்டு விடுதலைக்காக நேரடி நடவடிக்கையை ஆரம்பிப்பார்கள். எங்கள் இயக்கம் நாடெங்கும் பலப்பட்டுள்ளது. போர்ச்சுகீயர் நிர்வாகத்தை நடத்த முடியாதபடி பல சங்கடங்களை எங்கள் நேரடி நடவடிக்கை தடுக்கும்.

இதற்காக ஒரு புரட்சி தலைமைஸ்தானத்தை அமைக்க அங்கோலிய தலைவர்களிடையே பேச்சுகள் நடந்துவருகின்றன. அல்ஜீரிய தேசிய விடுதலை இராணுவத்தைப்போல், அங்கோலாவிலும் திரட்டப்படும்.

ஆபிரிக்க தேசிய இயக்கத்தின் புரட்சி அரங்கமாக அடுத்தபடி அங்கோலா இருக்குமென்று "வால் ஸ்டிரீட்" பத்திரிகை கூறியிருப்பது ஆதாரமற்றதன்று. (முற்றும்)

## ஐயாறன் எழுதுவது

நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமான மறியல் இயக்கத்தைக் கண்டதும் எனக்குச் சென்னையில் நடந்த பழைய நினைவுகளெல்லாம் வந்தன.

1930-ம் வருடத்தில் உப்பு சத்தியாக்கிரகம் நடந்தபோது சென்னையில் இருந்தேன். கிடங்குத்தெரு, சைனுபஜார் இவ்விடங்களிலுள்ள சீமைத் துணிக்கடைகளுக்குமுன் மறியல் நடக்கும். ஆண், பெண் தொண்டர்கள் கடை வாசலுக்குமுன் நின்று சீமைத்துணி வாங்காதீர்கள் என்று அங்கு வருபவர்களை மன்ருடி கேட்டுக்கொள்வர். லாரிகளில் பொலிஸார் தடிகளுடன் வந்து காத்திருப்பர். பத்திரிகை நிருபர் என்ற முறையில் அங்கு சென்றிருந்தேன். தொண்டர்களை பொலிசார் தடியால் அடித்து லாரிகளில் ஏற்றித் தூர இடங்களில் விட்டுவிடுவார்கள். ஒரு சிலரைத்தான் கைதுசெய்து சிறைக்கு அனுப்புவர்.

மற்றொரு பத்திரிகை நிருபரும் வந்து, தொண்டர்களின் பெயர்களையெல்லாம் கேட்டார். தொண்டர்களுடன் அந்த நிருபரையும் சேர்த்து, பொலிசார் லாரியில் போட்டுக்கொண்டு போய்விட்டனர்! பொலிஸ் ஸ்டேஷனுக்கு அவரைக்கொண்டுபோய் விசாரித்து, பத்திரிகைக்காரர் என்று தெரிந்ததும் மாலையில் விடுதலை செய்தனர். அவ்வளவு கண்மூடி தர்பார்?

ஒருசமயம் 'சுவராஜ்யா' பத்திரிகை ஆசிரியரான காஸா சுப்பராவ், சைனு பஜாரில் ஒரு கடைமுன் நின்று மறியல் செய்தார். ஒருவண்டியில் சாக்கடைக் கும்பி நீரைக் கொணர்ந்து, குழாய்வைத்து. அவர் உள்ளிட்டு மறியல் தொண்டர்கள்மீது பாய்ச்சினர். அசையவில்லை தொண்டர்கள்.

பின்னர் குண்டாந் தடியால் சுப்பராவ் உள்ளிட்டு தொண்டர்களை இரக்கமின்றி அடித்தனர். ஒவ்வொரு அடிவிழுகையிலும் 'வந்தே மாதரம்!', 'மகாத்மா காந்திக்கு ஜே!' என்று கோஷமிட்டு சாய்ந்தனர். அவர்களை பொலிசார் பின்னர் லாறியில்போட்டு தூக்கிக்கொண்டு, தூர இடத்தில் விட்டுவிட்டனர். தொண்டர்கள் அப்படியெல்லாம் தியாகம் செய்ததின் பயன்தான் இன்று இந்தியா சுதந்தரத்துடன் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

* * *

வேதாரணியத்திலே ராஜாஜியின் தலைமையில் உப்பு சத்தியாக்கிரகம் நடந்தது. திருச்சியிலிருந்து பல தொண்டர் படையுடன் வேதாரண்யத்துக்கு நடந்து சென்ருர் ராஜாஜி.

எல்லாத் தொண்டர்கள் கையிலும் விளக்குமாறு, வழியிலே கிராமங்களின் தெருக்களை ராஜாஜியும் தொண்டர்கரும் பெருக்கி சுத்தம் செய்வர். தஞ்சையிலே தார்ன் என்ற வெள்ளைக்காரர் அப்போது கலெக்டராக இருந்தார். அத்தொண்டர்படைக்கு, கிராமவாசிகள் யாரும் குடிக்கத் தண்ணீர்கூட கொடுக்கக்கூடாதென்று உத்தரவும் போட்டார்! என்ருலும் கிராம மக்களில் பலர் துணிச்சலுடன் முன்வந்து ராஜாஜிக்கும் தொண்டர்களுக்கும் உணவெல்லாம் அளித்தனர்.

உப்பெடுத்த தொண்டர்களை புளியங் குச்சியால் பொலிசார் அடித்தனர். என்ருலும் இளம் வாலிபர்கள் தேசிய கோஷங்களுடன் அடியையெல்லாம் பொறுத்துக் கொண்டனர். அவர்கள் பெற்ற ஒவ்வொரு அடியும், பாரதநாட்டின் சுதந்திரக் கோவில்கட்டுவதற்கான ஒவ்வொரு திருப்பணிக்கல்லாக அமைந்தது.

அப்படி அடிபட்ட வாலிபரில் ஒருவர் இப்போது கொழும்பிலே ஒரு வங்கியில் வேலை செய்து வருகிறார்.

* * *

கிறிஸ்துவப் பெரியாரான நியூமனின் கீழ்க்கண்ட பிரார்த்தனை மகாத்மாவின் மனதுக்கு மிகவும் பிடித்தது:

இருள்சூழ்ந்து நிற்கிறது
ஆண்டவனே!
பரஞ்சுடரே வழி காட்டு
வாய்!
வெகு தூரத்தில்
இருக்கிறேன்
பேரிருட்டில் அலைகிறேன்
என் அப்பனே! எப்பொது
ஊர்போய்ச் சேருவேன்!
வழிகாட்டுவாய்! எந்தையே!
இருளில் வழி முழுதும்
தென்படவில்லை
ஓரடி ஓரடியாகப் பிறழாமல்
வைத்துச்
சென்றேனுல் போதும்
தடுமாறும் காலுக்குக் காவல்
நிற்பாய்
என் பாதத்துக்கு ஒளிகாட்டு
உன்னிடம் ஒப்படைத்து
வாய்விட்டேன்
ஓரடி ஓரடியாகத் தடம்
பிறழாது சென்ருல்போதும்
என் தளர் நடைக்கு
அருள்வாய் ஆண்டவனே!

# கடங்காவுக்கு அமெரிக்க விமானம் சென்றதா

## "நிரூபிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை"

—ஸ்டீவன்சன்

அமெரிக்க விமான ஸ்தாபனமொன்று பெல்ஜியத்திலிருந்து கட்டாங்காவுக்கு மூன்று ஜெட் விமானங்களை அனுப்பி வைத்ததாக வெளிவந்த செய்திகள் பற்றி அமெரிக்க அரசாங்கம் விசாரணை செய்து வருவதாகவும், இந்தக் குற்றச்சாட்டு உண்மையானுல் சம்பந்தப்பட்ட ஸ்தாபனத்தின்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் ஐ. நா. வில் அமெரிக்கப் பிரதிநிதியான திரு. அட்லாஸ் ஸ்டீவன்சன் அறிவித்திருக்கிருர்.

அந்த மூன்று விமானங்களையும் காங்கோவுக்கு அனுப்பக்கூடாதென்ற ஏற்பாட்டின்கீழ் பிரான்ஸ், பெல்ஜியத்துக்கு விற்றதென்றும் கடாங்காவுக்கு ஒரு அமெரிக்க ஸ்தாபனம்தான் அந்த மூன்று விமானங்களையும் அனுப்பிவைத்தது என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட ஸ்தாபனத்தின் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

**மலாயா பிரதமர் கருத்து**

"காங்கோவிலுள்ள பெல்ஜியத் துருப்புகள் உடனடியாக வாபஸாக வேண்டும். இல்லையென்ருல் அங்கு மேலும் சங்கடங்கள் ஏற்படலாம்" என்று மலாயா பிரதமர் எச்சரிக்கிருர்.

காங்கோவிலுள்ள ஐ. நா. படைகளோடு சேர்ந்துகொள்வதற்காக மலாயா மேலும் 800 துருப்புகளை அனுப்பி வைக்குமென்று மலாயா பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மான் அறிவித்திருக்கிருர்.

**இலியோவை அமெரிக்கா ஆதரிக்கும்**

காங்கோ ஜனதிபதி திரு. கஸவுபுவினல் நியமிக்கப்பட்ட பிரதமர் திரு. இலியோவின் தலைமையிலுள்ள அரசாங்கத்தை அமெரிக்கா ஆதரிக்குமென்றும், அந்த அரசாங்கத்தில் இதர கட்சிகளும் சேர்ந்து கொள்ளும் வகையில் அது விரிவுபடுத்தப்படவேண்டுமென்றும் ஜனதிபதி கெனடி அறிவித்திருக்கிருர்.

திரு. இலியோ காங்கோ மக்களால் தெரிவுசெய்யப்படாதவராகையால் அவரை அமெரிக்கா ஆதரிக்கும் என்று திரு. கெனடி அறிவித்திருப்பது தமக்கு அதிர்ச்சியளிப்பதாய் இருக்கிறது என்று கான பிரதமர் திரு. நிக்ருமா கூறியுள்ளார்.

காங்கோவிலுள்ள ஐ. நா. படைகளுக்குப் பதில் ஆபிரிக்கப் படைகளை வைப்பது பற்றி ஆலோசனை நடத்துவதற்கு தாம் நியூயார்க் போக விருப்பதாகவும் திரு. நிக்ருமா அறிவித்திருக்கிருர்.

**கஸவுபுக்கு தயாள் கடிதம்**

லியோபோலட்வில்லிலிருந்து மேற்கு கெசொவ் மாகாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள லுமும்பா ஆதரவாளர்களின் நிலைமைபற்றி அறிவிக்கும்படி காங்கோவிலுள்ள ஐ. நா. பிரதிநிதி திரு. ராஜேஸ்வர தயாள் ஜனதிபதி கஸவுபுவுக்கு எழுதியுள்ளார்.

**ரஷ்யா கண்டனம்**

ஐ. நா. பாதுகாப்புசபை காங்கோ சம்பந்தமாக ஏதாவதொரு நல்ல முடிவுக்கு வரும் போதெல்லாம் மேற்கு வல்லரசுகள் அதற்கு விரோதமாக சதிவேலைகளில் ஈடுபடுகின்றனவென்று ரஷ்யா கண்டித்திருக்கிறது.

---

## மாதக்கடைசியில் முத்துக் குளிப்பு

கொழும்பு

இம்மாதக்கடைசியில்முத்துக் குளிப்பு நடத்துவதென மீன்பிடி இலாகா தீர்மானித்துள்ளது. கற்பட்டி, புத்தளம், மன்னர், திருக்கோணமலை, சிலாபம் ஆகிய இடங்களில் 1 கோடி முத்துச் சிப்பிகள் கிடைக்குமென மீன்பிடி இலாகா எதிர்பார்க்கிறது.

---

## 2 வது சிமெந்து தொழிற்சாலை நிறுவப்படும்

கொழும்பு

இரண்டாவது சிமெந்து தொழிற்சாலை ஒன்றை காலியில் நிறுவுவதென கைத்தொழில் மந்திரி தீர்மானித்துள்ளார். கொஸ்வத்தையில் நிறுவப்பட விருக்கும். இத்தொழிற்சாலை, காங்கேசன்துறைத் தொழிற்சாலையின் அளவைப் போன்று இருக்கும்.

## அரசியல்கட்சி அமைப்பும் ஜனநாயகத்தின் வெற்றியும்

### டாக்டர் ராதாகிருஷ்ணன் கருத்து

ஒரு நாட்டில் ஜனநாயகம் வெற்றியளிப்பதற்கு, கட்டுப்பாடான அரசியல்கட்சி அமைப்பும், தூய்மையான நிர்வாகத்திறனும், நேர்மையான அரசியல் தலைவர்களும் அவசியமாகுமென்று இந்திய உப ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினர்.

ஒரிஸ்ஸா மாகாண சட்ட சபையின் புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்து டாக்டர் ராதாகிருஷ்ண்ன் பேசினர். அவர் மேலும் பேசுகையில் அரசியல் ஜனநாயகம் நிலைப்பதற்குப் பொருளாதாரத் துறையில் சுபீட்சம் ஏற்படவேண்டுமென்ருர்.

"இந்தியா பார்லிமெண்டரி அரசியல் அமைப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அது வெற்றியளிக்கவேண்டுமானல் அரசியல் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை இருக்கவேண்டும். அரசியல் கட்சிகளின் அடிப்படைக் கொள்கைகளில் வேற்றுமையிருப்பின் ஜனநாயகம் வெற்றிகரமாகச் செயல்படுவது முடியாத காரியம்" என்று உப ஜனதிபதி குறிப்பிட்டார்.

அரசியல் கட்சி முறை ஸ்திரப்படவேண்டுமானல இரண்டு முக்கிய கட்சிகளும், சுதந்திரமாக இயங்கும் பத்திரிகைகளும், திறமையான சிவில் சேவையும், தேசபக்தி மிக்க தலைவர்களும், தூய்மையும், பாராபட்சமற்ற நிர்வாகமும் அவசியம் என்று அவர் சொன்னர்.

## சென்னையில் மகாராணி

சென்னை

பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத்தும் அவர் கணவர் எடின்பரோ கோமகனும் ஞாயிறு மாலை சென்னை வந்து சேர்ந்த போது கோலாகலமான வரவரவேற்பு அளிக்கப்பட்டது.

மகாராணியின் விமானம் சென்னை மீனம்பாக்கம் விமான நிலயத்தில் இறங்கியவுடன் சென்னை கவர்னர் திரு. விஷ்ணுராம் மேதி, முதன் மந்திரி காமராஜ், இதர மந்திரிகள் பிரபலஸ்தர்கள் ஆகியோர் ராஜ தம்பதிகளை எதிர்கொண்டழைத்து வரவேற்றனர்.

பொலிஸ் பாண்டுவாத்தியக் கோஷ்டி இசைமுழக்க, விமானப்படை வீரர்களின் அணிவகுப்பை மகாராணி பார்வையிட்டார்.

பின் ராஜபவனம் செல்லும் வழிநெடுக லட்சக்கணக்கான மக்கள் கூடிநின்று மகாராணிக்கு மகத்தான வரவேற்பு அளித்தனர். அன்றுதான் மகாராணியின் 3 வது புதல்வரான அண்ட்ரு இளவரசரின் பிறந்ததினம். இந்த நன்னளில் சென்னை மக்களின் கோலாகல வரவேற்பு எலிஸபெத் மகாராணியாரை எவ்விதம் பரவசப்படுத்தியதென்பது அவரது முகத்தில் நன்கு தெரிந்தது.

சென்னை கவர்னர் மேதியும் மகாராணியும் ஒரு காரில் முன்னே செல்ல, முதன் மந்திரி காமராஜும் எடின்பரோ கோமகனும் மற்ருேர் காரில் ராஜபவனம் சென்றனர்.

# தொண்டர்களுக்கு பாராட்டு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய நிகழ்ச்சி இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்கள் தமது சுதந்திரத்தை அடைந்தே தீருவதென்று உறுதி பூண்டுவிட்டார்களென்பதையே காட்டுகின்றது.

**கஷ்டமான பாதை காலமாகலாம்**

நாம் இறங்கியுள்ள பாதை மிகவும் கஷ்டமானது. எமது இயக்கம் எவ்வளவு காலம் நடந்தாலும் நாம் எமது நாட்டிலே உரிமை இழந்து அடங்கி ஒடுங்கி வாழப்போவதில்லையென்பதை இன்று காட்டிவிட்டோம்.

**பொலிசார் செய்தது**

இன்று பொலிசார் நடந்து கொண்டவிதம் கண்டிக்கத்தக்கது. சத்தியாக்கிரகி எதற்கும் தன்னை அர்ப்பணிக்கத்தயாராகிக்கொள்ள வேண்டும். பொலிசாரின் நடவடிக்கையைப் பற்றி சாத்தியாக்கிரகி முறைப்பாடு செய்யக்கூடாது. அடியையும் காயத்தையும் ஏற்க சத்தியாக்கிரகிதயாராக இருக்கவேண்டும். ஆயினும் இன்று நடந்த விஷயங்களை நாம் உலகறியச் செய்யவேண்டும்.

**52 தொண்டர்கள் காயமடைந்தனர்**

இன்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் 52 தொண்டர்கள் சிகிச்சை பெற்றுக் கொண்டு சென்றனர். இவர்களில் பலருக்குக் கடுமையான காயம். ஒருவருக்கு வலக்கை முறிந்தது, மற்றொருவருக்கு ஒரு கால் உடைந்தது, இன்னொருவருக்கு தலையில் காயம். தாக்குதல் பலமாக இருந்தாலும் திருப்பித் தாக்குவதில்லையென்று பூண்ட விரதத்தைத் தொண்டர்கள் கடைப்பிடித்தனர்.

மறியல் செய்யும் தொண்டர்களை பொலிசார் தூக்கியெறிந்தால் மீண்டும் மீணடும் வந்து அதே இடத்தில் படுத்துக்கொள்ள வேண்டுமென்பது தான் நாங்கள் செய்துகொண்ட முறை.

அரசாங்க அதிபர் வெளியே வருவதற்கு வழி விட்டுக் கொடுப்பதற்காக தொண்டர்களை பொலிசார் தூக்கியெறிந்தனர். அதற்குப் பணியாத தொண்டர்களை பொலிசார் தடியால் கண்டபடி தாக்கினர். வீரமக்கள் அதற்கும் இடம் கொடுக்கவில்லை.

வழியை மறித்துப் படுத்துக் கிடக்கும் தொண்டர்களை தூக்கி எறிவதுதான் முறை. குண்டாந்தடியால் அடிப்பதோ, சப்பாத்துக் காலால் உதைப்பதோ, தாக்குவதோ முறையல்ல.

**வேறு வழி இல்லை**

இப்போதுள்ள அரசியல் நிலையில் தமிழ்ப் பேசும் மக்களுக்கு நேரடிநடவடிக்கையைத் தவிர வேறு வழியில்லை.

நாளை தொடக்கம் எங்கள் இயக்கத்தைப் பெரிதாக்கி நடத்த ஒழுங்குசெய்துள்ளோம் இதற்கு மக்களின் ஆதரவு தேவை.

**கோப்பாய் எம் பி. கோரிக்கை**

கோப்பாய்த் தொகுதி எம். பி. திரு. எம். பாலசுந்தரம் பேசுகையில் மக்கள் உதவி செய்தால் இயக்கம் வளரும் உரிமை கிடைக்குமென்ருர்.

**அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு எதிப்பு**

பொலிசாரின் தடியடிப் பிரயோகத்தில் காயமடைந்த புதுமைலோலன் பேசுகையில் அரசாங்க அதிபரையோ, பொலிசரையோ தாங்கள் எதிர்க்கவில்லை யென்றும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளையே எதிர்ப்பதாகவும் கூறினர்.

ஒவ்வொரு நாள் இயக்கத்திற்கும் தொண்டர்கள் தொகை நூற்றுக் கணக்காக அதிகரிக்க வேண்டுமென்றும் வீட்டுக்கொருவர் போராட்டத்தில் குதிக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

**நீர்கொழும்புத் தமிழர் பேச்சு**

நீர்கொழும்பிலிருந்து வந்து மறியல் இயக்கத்தில் கலந்து கொண்ட திரு. பிரான்சிஸ் பெரேரா பேசுகையில் தமிழ் மொழிக்காகவும், உரிமைக்காகவும் தம் உயிரையும் அர்ப்பணிக்கத்தயாரென்ருர்.

**தமிழினத்துக்கு அடித்த அடி**

திரு. வி. ஏ. கந்தையா பேசுகையில் தொண்டர்களுக்கு இன்று விழுந்த அடி தமிழனைக்கு, தமிழ் இனத்துக்கு விழுந்த அடியாகும் என்ருர். பொலிசார் அடித்த தடி டாக்டர் நாகநாதன் முதுகில் பட்ட போது உடைந்தது போல தமிழுக்கு அடியும் முடிவில் உடைந்தே போகுமென்ருர்.

"நீதியை அடிப்படையாகக் கொண்ட போராட்டம் வெற்றி பெற்றே தீரும்" என்று திரு. கந்தையா கூறினர்.

மலைநாட்டிலிருந்து வந்த சுமார் முப்பது வாழ்த்துத் தந்திகளை கட்சிப் பொதுக் காரியதரிசி திரு. வி. நவரத்ரத்தினம் வாசித்தார்.

---

## ஆர்ப்பாட்டம்

லண்டன்

ஸ்காட்லாந்தில் நீர் மூழ்கி ஏவுகணைத்தளம் அமைப்பதையும், அணு ஆயுத உற்பத்தியையும் எதிர்த்து சுமார் 4000 பேர்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு வெளியே ஆர்ப்பாட்டம் செய்தனர்.

'ஹென்றி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்றி

★ சேட் ★ ஷோட்
★ காற்சட்டை ★

ஹென்றி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்றி உடைவகையில்
நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினலும்,
அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்றி (காமெண்ட்ஸ்) லிமிட்டெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை

யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு ஏக விநியோகஸ்தர்கள்:
ஆதம்பாய் ஸ்ரோஸ்
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்

லுமும்பாவை

# பிரார்த்தனை செய்கையில் சுட்டுக் கொன்றனராம்

## கானு ஜனாதிபதி வெளியிட்ட தகவல்

ஒரு மாதத்துக்கு முன்னர் காங்கோ பிரதமர் திரு. பாட்ரிக்ஸ் லுமும்பா பிரார்த்தனை செய்து கொண்டிருக்கையில் பெல்ஜிய அதிகாரியொருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார்என்று கானு ஜனாதிபதி திரு. நிக்ருமா அறிவித்திருக்கிறார்.

லுமும்பா படுகொலைசெய்யப்பட்டதைக் கண்டிப்பதற்காக நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையிலேயே திரு.நிக்ருமா இந்தத்தகவலைத்தெரிவித்தார். அந்தக் கூட்டத்தில் சோவியத் ஜனாதிபதியும் கலந்து கொண்டார்.

லுமும்பா ஆதரவாளர்களான காங்கோ அரசியல் தலைவர்களில் ஏராளமானோர் கஸாய் தெற்குமாகாணத்துக்கு கைதிகளாகக்கொண்டு செல்லப்பட்டுள்ளனரென்று காங்கோவில் ஐ. நா. பிரதிநிதியாகவிருக்கும் திரு. தயாள் ஐ நா. காரியதரிசி திரு. ஹமர்ஷீல்ட்டுக்கு அறிவித்திருக்கிறார்.

அரசியல் தலைவர்கள் இந்த முறையில் கடத்திச் செல்லப்படுவதால் காங்கோவில் விபரீதநிலைமை உருவாகலாம் என்றும், கடத்திச் செல்லப்பட்டவர்களில் பலர் கொல்லப்பட்டு விட்டதாக செய்திகள் உலாவுகின்றனவென்றும் திரு.தயாள் அறிவித்திருக்கிறார்.

### சடலத்தைக் கொடுக்கமறுப்பு

கொலை செய்யப்பட்ட திரு. லுமும்பாவினதும் அவருடைய இரண்டு சகாக்களதும் சடலங்களைத் தரும்படி ஐ. நா.விடுத்த கோரிக்கையை கடாங்கா ஜனாதிபதி திரு. ஷோம்பே மீண்டும் மறுத்துவிட்டார்.

### புதுடில்லியில் சர்வகட்சி மகாநாடு

புதுடில்லியில் லுமும்பா கொலை செய்யப்பட்டதைக் கண்டிப்பதற்காக ஒரு சர்வகட்சி மகாநாடு நடைபெற்றது. மகாநாட்டுக்குக் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சஞ்சீவி ரெட்டி தலைமை வகித்தார்.

லுமும்பாவின் கொலைக்குக் காரணமாகவிருந்தவர்கள் அனைவரையும் கண்டுபிடித்து கடும் தண்டனைக்குள்ளாக்க வேண்டும் என்று கூறும் தீர்மானம் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. திருகாலோஞ்சி, மொபுட்டு, ஷோம்பே ஆகியோரின் படைகளை நிராயுதபாணியாக்க வேண்டுமென்றும் கூட்டம் கேட்டுக்கொண்டது.

இதற்கிடையில் புதுடில்லியில் கூடிய காங்கிரஸ் காரியக்கமிட்டியும் காங்கோவின் நிலைமை குறித்துக் கவலை தெரிவிக்கும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

### கெய்ரோவில் சம்பவம்

கெய்ரோவில் ஆட்சேபகரமான சில துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் அமெரிக்க தூதராலயத்தைச் சேர்ந்த ஒரு தகவல் அதிகாரியைக் கெய்ரோ போலிசார் தடுத்து வைத்துச் சுமார் 10 மணி நேரம் விசாரணை செய்தனர்.

அந்தத் துண்டுப் பிரசுரங்களில் முதலாளித்துவ நாடுகளின் கருத்துக்களும் திரு. கெனடியின் சொற்பொழிவில் சில பகுதிகளும் அடங்கியிருந்ததாக அறிவிக்கப்பட்டது.

லண்டனில் டிராபால்கார் என்ற இடத்தில் நடைபெற்ற ஒரு ஆர்ப்பாட்டத்தின்போது போலிசாருக்கும் ஆர்ப்பாட்டக்காரருக்குமிடையில் பலத்த மோதல் ஏற்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பார்லிமென்ட் எம். பி.க்களும் கலந்து கொண்டனர்.

## தங்கச் சுரங்கத்தில் வெடி விபத்து

ஜோஹன்னர்ஸ்பர்க்

ஜோஹன்னர்ஸ்பர்க்கிலுள்ள ஒரு தங்கச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் சுமார் 40 பேர் கொல்லப்பட்டிருக்கக் கூடுமென்று நம்பப்படுகிறது.

இறந்தவர்களில் 36 பேர் ஆபிரிக்கர் என்றும் 4 பேர் வெள்ளையர்களென்றும் கருதப்படுகிறது. சுரங்கத்தில் 20 பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்த அரை தொன் டைனமைட் வெடித்ததினால்தான் இந்த விபத்து ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## நல்ல விளைச்சல்

கிளிநொச்சி

கால போக விளைச்சல் கிளிநொச்சியில் அதிகரித்திருக்கின்றது. ஆனால் கடந்த சில தினங்களாக மழை வானம் மப்பும் மந்தாரமுமாகக் காணப் படுவதால் விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

சென்ற வருடத்தைப் போல் இந்த வருடமும் இரணைமடுக் குளத்தில் நீர் நிறைய இருப்பதால் சிறுபோக நெல் உற்பத்தி நல்ல பலனைக் கொடுக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஒரிஸ்ஸா ராஜ்ய மந்திரிசபை

புதுடில்தி

ஒரிஸ்ஸா ராஜ்ய கலப்பு மந்திரி சபை தனது ராஜினாமாவை கவர்னரிடம் சமர்ப்பித்து விட வேண்டுமென்று ஒரிஸ்ஸா ராஜ்ய காங்கிரஸ் கட்சி முடிவு செய்துள்ளது.

# அணு ஆயுத பரீட்சையை ஆட்சேபித்து லண்டனில் ஆர்ப்பாட்டம்

லண்டன்

அணு ஆயுதப் பரீட்சைகள் நடத்துவதைக் கண்டித்துச் சென்ற சனிக்கிழமை பேராசிரியர் பேட்ரன் ரஸல் 3 மணி நேரம்ஆர்ப்பாட்டம்நடத்தினர்.

அணு ஆயுதப் பரீட்சைகள் தொடர்ந்து நடைபெற்றால் உலகில் விபரீதங்கள் ஏற்படலாம் என்று பேட்ரன ரஸல்பிரபு தெரிவித்திருக்கிறார். கடந்த சனிக்கிழமையன்று பேராசிரியர் பேட்ரன ரஸல் 4 பேர் கொண்ட ஒரு கோஷ்டிக்குத் தலைமை வகித்துச் சென்று நடைபாதையில்அமர்ந்து ஆர்ப்பாட்டம் செய்தார். தாம் நடத்திய ஆர்ப்பாட்டங்களில்பொலிசார் தலையிட்டு நடவடிக்கை எடுக்காதது குறித்து ரஸல் பிரபு கவலை தெரிவித்திருக்கிறார்.

பேராசிரியர் ரஸல் பிரபு பிரிட்டனில் தலை சிறந்த தத்துவ விஞ்ஞானியாக விளங்குகிறார். சமாதனத்துக்குப் பணி புரிந்தமைக்குக்காக அவருக்கு நோபல் பரிசு அளிக்கப்பட்டது.

## தமிழ் மறைத் தேர்வு

அகில இலங்கைத் தமிழ் மறைக்கழகம் நடாத்தும் திருக்குறள் தேர்வுப் போட்டிக்கு 1—3—61வரை விண்ணப்பிக்கலாம் எனக் கழகத் தேர்வுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

தேர்வு பற்றிய விபரமறிய விரும்புவோர் 58 முப்பத்திநாலாம்ஒழுங்கைகொழும்பு—6 என்ற விலாசத்திற்கு எழுதலாம்.

## தமிழாசிரியர்கள் ஆங்கிலத்தில் கடிதம்!

கல்வி இலாகா முதல் சகல இலாகாக்களுடனும் தமிழாசிரியர்கள் தமிழ் மொழி மூலமே தொடர்பு கொள்ள வேண்டுமென கிழக்கிலங்கைத் தமிழாசிரியர் சங்கம் ஏற்கெனவே கேட்டிருந்தது. இந்த வேண்டுகோளைப் பெரும்பாலான ஆசிரியர்கள் ஆதரித்தபோதிலும் ஒரு சிலஆசிரியர்கள் சம்பள விண்ணப்பப் பட்டியல் முதல் சகல கடிதத் தொடர்புகளையும் இன்னும் ஆங்கிலத்திலே நடத்திக் கொண்டு வருகின்றார்களெனத் தெரிகிறது.

## பாதைகள் துண்டிப்பு

கல்லடி உப்போடை

சென்ற சில தினங்களாகப் பெய்த பெருமழைகாரணமாகப் பாதைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. ஓந்தாச்சி மடம், கோட்டைக் கல்லாறு, தாம்போதிகள் நீரில் மூழ்கின. இதனால் கல்முனை, அம்பாரை, அக்கரைப்பற்றுப் பாதைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. தபால் பத்திரிகை என்பன படகு மூலம் கல்முனை, அம்பாரை, அக்கரைப் பற்றுப் பகுதிகட்குஅனுப்பப்படுகின்றன. சமீபத்தில் அறுவடை செய்ய விருந்த ஏராளமான நெல்வயல்கள் நீரில் அமிழ்ந்து விட்டன.

## சிம்லாவில் மேலும் நாலு பேர் பலி

சிம்லா

சிம்லாவில் கடும் பனி பெய்ததின் விளைவாகமேலும் 4 பேர் மாண்டுள்ளனர். இதுவரை சிம்லாவில் கடும் பனிக்கு 22 பேர் இரையாகியுள்ளனர். சிம்லாவிற்கும் நாட்டின் இதர தேசத்திற்குமிடையில் இருந்து வந்ததந்தி போக்குவரத்துத்தொடர்புகள் யாவும்துண்டிக்கப்பட்டுள்ளன.

## அல்ஜீரியாவுக்கு சுதந்திரம வழங்குக

புதுடில்லி

இப்போது புதுடில்லியில் நடைபெற்றுவரும் ஆபிரிக்கா பற்றிய மகாநாடு அல்ஜீரியா நிலை பற்றி அனுதாபம் தெரிவித்ததுடன் சீக்கிரம் அந்நாட்டுக்குப்பூரண சுதந்திரம் வழங்க வேண்டும் எனவும்கோருகிறது

## பெரம்பூரில் மகாராணி எலிசபெத்

சென்னை

எலிசபெத் மகாராணி பெரம்பூரில் ரயில் பெட்டித் தொழிற்சாலைக்கு விஜயம் செய்தார்.

தொழிற் சாலையில் வேலை செய்யும் தொழிலாளர் குடியிருப்புப்பகுதிகளுக்கும் இராணி சென்று பார்வையிட்டார்.

## காட்டில் மனித எலும்பு

பதுளை

ஒரு மனிதனின் மண்டை ஓடும், எலும்புகளும் காட்டுக்குள் கண்டு பிடிக்கப்பட்டன கஞ்சா செடிகள் வளர்ந்து நிற்கும் புதரொன்றில் இந்த மனித எலும்புகள் கிடந்தன.

எலும்பு கிடந்த இடத்தில் இரண்டு மண்வெட்டிகளும், சாம்பலும் காணப்பட்டன காட்டுவழியாகப் பல மைல் தூரம் நடந்து சென்ற பதுளை நீதிபதி விசாரணை நடத்தினர். இந்த மனிதன் யாரென்று கண்டுபிடிக்கப்படவில்லை.

## சீனு—பாக் பேச்சு வார்த்தை

### காஷ்மீர் விவசாயிகள் கண்டனம்

புதுடில்லி

காஷ்மீரில் பாகிஸ்தான் கைப்பற்றியபகுதிகளின் எல்லை நிர்ணயம் பற்றி சீனுவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடக்கவிருப்பதை காஷ்மீர் விவசாயிகள் கண்டித்திருக்கின்றனர்சீனுவும் பாகிஸ்தானும் தாம் பிடித்துக் கொண்டுருக்கும் பகுதிகளிலிருந்து வெளியேறவேண்டுமென்றும் பாரதத்தின் உறுப்பான பகுதிகள்பற்றி வெளியார்பேச்சுக்கள் நடத்தவேண்டியதில்லையென்றும் நேற்று நடைபெற்ற விவசாயிகள் கூட்டத்தில்தெரிவிக்கப்பட்டது.


'அல்கத்தீன்' பைப் தூரத்திலுள்ள கிராமங்களுக்கு எப்பொழுதும் சுத்தமான தண்ணீர் விநியோகத்தை நிச்சயப் படுத்துகின்றது.

அனுகூலங்கள் :

★ 'அல்கத்தீன்' பைப் பாரமற்றதாகையால் அதைக் கையாளுவது சுலபம்.

★ 'அல்கத்தீன்' பைப் 500 அடி நீளம் வரையுள்ள வசதியான சுருள்களில் கிடைக்கின்றது.

★ 'அல்கத்தீன்' பைப் வளையக்கூடியதாகையால் அதை நிறுவுவது எளிது. இதை கரடு முரடான ஏற்ற இரக்கமான நிலத்திலும் பாவிக்கலாம்.

★ 'அல்கத்தீன்' பைப் உறுதியானதும் நீடித்து நிலைக்கக் கூடியதுமாகையால் இது தற்காலிகமாகவும் நிரந்தரமாகவும் நிறுவப்படுவதற்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கின்றது.

★ 'அல்கத்தீன்' பைப் பாஷாண சம்பந்தமில்லாதது. துரு பிடிக்கவிடாது. தண்ணீரைச் சுத்தமாக வைக்கின்றது. இது செதில்களாகப் பெயர்வதில்லை. தேய்வை எதிர்க்கின்றது. சாதாரணமாக அரிக்கும் என்ற கருதப்படும் மண்ணினாலும் தண்ணீராலும் பாதிக்கப்படாதது.

★ 'அல்கத்தீன்' பைப் (சாதாரண கேஜ்) 'அல்கப்லான்' சாதானங்களோடு பாவிக்கப்படும்பொழுது உங்களுக்கு ஓர் முழுவதும் பொலித்தினாலான பைப் போடும் முறையைக் கொடுக்கின்றது.

★ 1½ அங்குலத்திலிருந்து 2 அங்குல அளவு துவாரங்களுள்ள 'அல்கத்தீன்' பைப் சாதாரண கேஜிலும் பாரமான கேஜிலும் இடைக்கின்றது.






விபரங்கட்கும் தொழில்சம்பந்தமான ஆலோசனைகளுக்கும் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள்:

ICI

இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (எக்ஸ்போட்) லிமிடெட்

(இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டின் ஓர் துணைக்கம்பெனி இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது. அங்கத்தவரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

தபாற் பெட்டி 352, கொழும்பு.

457-123

# "எங்கள் மீனை எங்களுக்கு 'டப்பா'க்களில் அனுப்புகிறார்கள்

## நிலம் குட்டிபோடாது மீன் குட்டி போடும்"

எங்கள் நாட்டைச் சேர்ந்தகடலில் எங்களுக்குக் கிடைக்கவேண்டிய மீன்களைப்பிடித்து டப்பாக்களில் அடைத்து எங்களுக்கே விற்பனை செய்கின்றனர் சிலர்! நாங்களே இதைச்செய்ய முடியாதா? என்று கேட்கிறார் 'ஆத்திரேயன்' பொருளாதார அபிவிருத்திக்கு அவர் மேலும் சில நல்ல யோசனைகளை இங்கு கூறுகிறார்.

எங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சி, இயற்கைவளம் மிகுதியுமுடைய பெரிய நாடுகள் கைக்கொள்ளும் முறையில் அமையவியலாது. கனிப்பொருள் வளம் உள்ள நாடுகளில் முதலில் கனரகத்தொழில்களை விருத்தி செய்வதிலேயே ஊக்கம் செலுத்துவார்கள். நம் நாடு சிறியது. கனிப்பொருள் வளமும் மிகக்குறைவு. ஆகவே தான் நாம் சிறு தொழில் முயற்சிகளில் முழு மூச்சுடன் ஈடுபட வேண்டும் என்ற கருத்து வலுவடைந்து வருகின்றது.

ஆனால் நாம் எவ்வளவுதான் இயந்திரசாதனங்களுடன் சிறு தொழில்களை ஆர்வத்துடனும் திறமையாகவும் வளர்த்தாலும் நம் பகுதியின் அடிப்படைப் பொருளாதாரம் எப்போதுமே கமத்தொழிலிலும், மீன்பிடித் தொழிலிலுமே தங்கியிருக்கும் என்பது எனது எண்ணம்.

### நிலம் குட்டிபோடாது

கமத்தொழில் வளர்ச்சிக்கு எப்பொழுதும் ஓர் உச்சவரம்பு உண்டு. இயந்திர சாதனங்களுடன் நவீனமுறையில் உற்பத்தியைப் பெருக்கலாம். ஆனால் நிலம் குட்டி போட்டுப்பெருகாது. மேலும் கமத்தொழிலில் நம் மக்களை ஊக்கம் எடுக்கச் செய்ய ஒருவித பிரசாரமும் தேவையில்லை. மக்களே சகல வசதிகளையும் நன்கு உபயோகிக்கத் தயங்குவதில்லை. வேளாண்மை தொன்றுதொட்டே கௌரவமான தொழிலாக இருந்து வந்திருக்கிறது.

ஆனால், மீன்பிடித்தொழிலில் துரிதமுன்னேற்றம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறதெனக்கூற முடியாது. நம் பகுதிமக்களில் பெரும்பாலோர் இத்தொழிலில் ஈடுபட்டாலன்றி நம்பகுதி ஒருநாளும் பொருளாதார சுதந்திரமடையாது என்பது திண்ணம்.

### பெருவாரிமீன்

நம் பகுதியைச் சூழ்ந்திருக்கும் கடலிலே பெருவாரியான மீன்கள் இருக்கின்றன. இதனை அனைவரும் அறிவர். வெளிநாட்டுமீன்பிடிக்கப்பல்கள் பல இன்றும் தமது கரையிலிருந்து 25 மைல் தூரத்தில் இயங்குகின்றன. பல வேளைகளில் இங்கு பிடித்த மீன்களை டப்பாக்களில் அடைத்து நம் நாட்டுக்கே அனுப்பி விடுகின்றார்கள்! கொல்லதெருவில் ஊசி விற்கும் வேலையை வெளிநாட்டார் செய்து கொண்டேயிருக்கின்றனர்!

கடல் வற்றுவளமுடையது மீன்கள் தங்கள் உணவைத் தாங்களே தேடிக்கொள்ளுகின்றன. இனப்பெருக்கமும் அதிகரிக்கும். வற்றாத இச்செல்வத்தை வாரி நாம் வளமடையலாமே.

எமது பகுதிகளில் மீன் பிடித்தல் பரம்பரைத் தொழிலாகவே நடந்து வருகின்றது. இம்மக்களின் படகுகள் கடலுள் சிறிது தூரமே செல்லும். பிடிக்கப்பட்டமீன்களை உடனடியாகக் கரைக்குக்கொண்டுவருவதிலேயே அவர்களுக்கு அக்கறை. எவ்வளவு விரைவில் விலையாகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு ஊதிபம் அதிகமாகக் கிடைக்கும். தாமதமேற்பட்டால் மீன்களின் தரமும் விலையும் குறையும். ஆகையினால் இவர்கள் கரையோரப்பகுதிகளிலேயே மீன்பிடிப்பதில் ஈடுபடுகின்றார்கள்.

அரசாங்கம் அனேக வழியில் மீன்பிடித்தொழிலுக்கு உதவி அளித்து வருகின்றது. நமது கடலில் மீன்பிடிப்பதற்கேற்ற படகொன்றை உலக உணவு, விவசாய ஸ்தாபனத்தார் நிர்மாணித்திருக்கின்றனர். இப்படகுகள் ஆழ்கடலிலும் செல்லக்கூடியவை. இப்படகுக்கான விலையின் பெரும் பகுதியை அரசாங்கம் கடனாக வழங்குகின்றது. நல்ல நைலோன் வலைகளைப் பெறுவதற்கும் அவர்களுக்கு வசதிகளுள்ளன. ஒருசிறு ஆரம்பமாக அரசாங்கம் ஒன்றரைத்தொன் பனிக்கட்டி நாளொன்றுக்கு உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்றையும் நிறுவியிருக்கின்றது.

### மீன்பிடிப்பதில் சிரமங்கள்

ஆனால் பரம்பரையாக இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களே ஆழ்கடலில் மீன் பிடிப்பதை இன்னும் பெரிய அளவில் ஏற்றுச் செய்வதில்லை. அவர்களுக்குச் சிரமங்கள் பல இருக்கலாம்.

1. இப்படகுகளில் குளிர்ச்சாதன வசதிகளில்லை. ஆழ்கடலில் மீன்களைப்பிடித்து கரைக்குக் கொண்டுவந்து சேர்ப்பதில் தாமதம் ஏற்பட்டால் மீன்கள் பழுதடைந்து விடுகின்றன.

2. இதேகாரணத்தினால் ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கு நைலான் வலைகள் உபயோகிக்க முடியவில்லை. இவை மீன்களை இரத்தமிழக்கச் செய்கின்றன.

3. கரைக்குக் கொண்டுவந்த பின்னரும் இவற்றைப் பத்திரப் படுத்துவதற்குத் தேவையான பனிக்கட்டி கொழும்பிலிருந்தே வர வேண்டியிருக்கின்றது.

4. போக்குவரத்துச்சாதனங்களுக்கும், விற்பனைக்கும் பெரும் முதலாளிகளையே நம்ப வேண்டியிருக்கிறது.

5. உடனடியாகக் கொழும்பில் விற்கமுடியாத மீன்களை பழையமுறைகளிலேயே உப்பிட்டு உலர்த்த வேண்டியிருக்கின்றது.

இவற்றின் காரணமாகவே மக்கள் கரையோரப் பகுதிகளிலேயே மீன்களைப்பிடித்து உடனடியாகவிற்று சிறுஊதியமாவதுபெற முயற்சிக்கின்றனர்.

நம் நாட்டைப்போன்ற தீவுதான் நியூபௌண்டுலாண்டு நாடும். அந்நாட்டு மக்களிற் பெரும்பான்மையோர், மீன் பிடித்தலை நம்பியே வாழ்கின்றனர். மீன்பிடித் தொழிலே அந்நாட்டு வருமானத்தில் பெரும்பகுதியாகவிருக்கின்றது.

### சாதிப்பாகுபாடு

நம் பகுதிகளில் மீன்பிடித்தலைப் பரம்பரையாக செய்துவருவோரைத்தவிர ஏனையோர் இம்முயற்சியில் ஈடுபடுவது கௌரவக்குறைவாக உயர்சாதி மக்களுக்குத் தோன்றுகின்றது.

சாதிப்பாகுபாடு எப்பொழுது, எவ்விதத்தில் தோன்றியது, இக்காலத்தில் இந்தக் கட்டுபாடு எவ்வளவு தீவிரமாகஅனுட்டானத்தில் இருந்து வருகின்றது. அது நல்லதா, பொல்லாததா, என்ற பெரும் பிரச்சினைகளைப் பற்றிய ஆராய்ச்சி இங்கு வேண்டியதில்லை. ஆனால் உயர்குடி வேளாளர் எல்லோரும் வேளாண்மை செய்தே வாழ்வதில்லை. அந்தணர் செந்தண்மை பூண்டு, அறிவு வளர்ச்சியில் மட்டுமே ஈடுபடுவதில்லை. இக்காலமுறைகளுக்கேற்ப ஊதியம் பெறக்கூடிய அனேக முயற்சிகளைச் செய்துகொண்டுதான் வருகின்றனர்.

(8-ம் பக்கம் பார்க்க)


இணையற்ற 2-வது மாதம்!

கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாசா (வெள்ளவத்தை) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) | வெம்பிளி (கண்டி)

மற்றும் பத்துத் திரைகளில்

★ எண்ணற்ற இரசிகர்களின் இதயத்தை ஈர்ந்த இன்பக்காவியம்!


★ தாய் அன்பிற்கு இணையாக தரணியில் எதுவும் கிடையாது என்பதை சித்தரிக்கும் இலட்சிய ஓவியம்!!

தென்னிந்தியாவில் 100-வது தினத்தை வெற்றியோடு கொண்டாடிய போதும் இன்னும் இரசிகர் கூட்டம் பெருகி எங்கு பார்த்தாலும் "கைராசி"யின் கதையாகவே இருக்கிறது!


உண்மையை அறிய இன்றே பாருங்கள்!

முகராசியுள்ள ஜெமினி கணேசன் எழில்ராசியுள்ள பி. சரோஜாதேவி

மற்றும்



சகஸ்ரநாமம்
எம். வி. ராஜம்மா
எம். ஆர். ராதா
கே. மாலதி
தங்கவேலு
மோகன்
கே. டி. சந்தானம்



நடித்த

வாசு பிலிம்ஸ்

கைராசி

டைரக்ஷன்: கே. சங்கர்

இசை அமைப்பு: ஆர். கோவர்த்தனம்

# உடுவில் எம். பி. க்கு தலையில் காயம்

## தொண்டர்கள் தாக்கப்பட்டனர்

### ஆகாயத்தை நோக்கி பொலிஸ் சுட்டது

யாழ்ப்பாணம் திங்கள்

இன்று நடை-பெற்ற மறியல் இயக்கத்தில் பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்ததில் உடுவில் எம், பி. திரு. வி. தர்மலிங்கத்திற்கு தலையில் காயம் ஏற்பட்டது. திரு. அமிர்தலிங்கத்திற்கு கழுத்தில் விக்கம் ஏற்பட்டது. பல தொண்டர்களும் காயமடைந்தனர். இவர்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர்.

இன்று காலை கச்சேரி முன் மறியல் செய்த தொண்டர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் புறப்பட்ட அரசாங்க அதிபரை வெளியேறமல் படுத்துக் கிடந்து தடுத்த போது பொலிசார் தொண்டர்களைத் தடியால் அடித்துத் தாக்கினார்கள். பொலிசார் அடிப்பதைப் பார்த்துக்கொண்டு நின்ற மக்கள் ஆத்திரமடைந்து கற்களை வீசினர். பொலிசார் ஆகாயத்தை நோக்கி மூன்று தடவை சுட்டனர். பின்னர் அங்கு நின்றவர்களைக் கலைத்து விட்டனர். பொலிசாரின் தடியடியால் காயமடைந்த தொண்டர்களை பொலிசார் இழுத்து எறிந்துவிட்டு அரசாங்க அதிபர் வெளியே போக வழி விட்டுக்கொடுத்தனர்.

### உடுவில் எம்.பி.க்கு தலையில் காயம்

அரசாங்க அதிபர் வெளியேறமல் கச்சேரி வாசலில் படுத்து மறியல் செய்த தொண்டர்களைப் பொலிசார் தாக்கியதில் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கத்திற்குத் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. ஆஸ்பத்திரிக்குச் சென்று மருந்து கட்டினர். திரு. அமிர்தலிங்கத்தின் கழுத்தில் வீக்கம் ஏற்பட்டுள்ளது. டாக்டர் நாகநாதனுக்குப் பொலிசார் தடியால் அடித்த போது தடி முறிந்து விட்டது.

## கச்சேரி நிர்வாகம் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம் திங்கள்

'சிங்களத்திணிப்பை' எதிர்த்து தமிழரசுக்கட்சி ஆரம்பித்துள்ள நேரடி நடவடிக்கையின் இரண்டாவது அம்சமான 'மறியல்' இயக்கம் இன்று காலை யாழ்ப்பாணம் கச்சேரி முன் ஆரம்பமானது. கச்சேரி ஊழியர்கள் உட்செல்லாதவாறு தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. செல்வநாயகமும் நூற்றுக்கு மேற்பட்ட தொண்டர்களும் கச்சேரியின் வாசல்களில் படுத்து மறியல் செய்தனர்.

தொண்டர்களைப் பொலிசார் இழுத்தெறிந்தும் தூக்கியெறிந்துகொண்டுமிருந்தனர். தொண்டர்கள் மீண்டும் மீண்டும் வாசலில் படுத்தவண்ணமிருந்தனர். நீர்கொழும்பிலிருந்து வந்த பிரான்சிஸ் என்ற சிங்களத்தொண்டரை பொலிசார் அடிக்கடி தூக்கி எறிந்தனர். 'இங்கிருந்து போகும் கடைசிஆள் நான்' என்று அவர் கூறினர். ஒரு பொலிஸ்காரரினல் விழுந்தெழும்பவிருந்த திரு. செல்வநாயகத்தை மற்றெரு பொலிஸ்காரர் பிடித்துக் காப்பாற்றினர்.

கச்சேரி .வாசலில் ஆயுதந்தரித்த பொலிஸ்காரர் குழுமிநிற்கின்றனர். குறுந்தடி, பாதுகாப்புக்கேடயம், கண்ணீர்ப்புகைக்குண்டு, துப்பாக்கி சகிதம் பொலிஸ்படை அங்கு திரண்டுள்ளது.

தொண்டர்களிடம் பொலிசார் நடந்துகொண்ட விதத்தைக்கண்ட மக்கள் ஆவேஷமாக ஆரவாரம் செய்தபோது அமைதியாக இருக்கும்படி தலைவர்கள் கேட்டுக்கொண்டனர்.

உடுவில் எம். பி. உட்பட தொண்டர்கள் பலருக்கு சிறுகாயங்கள் ஏற்பட்டன.

கச்சேரி வேலைகள் யாவும் ஸ்தம்பித்தன. உள்ளே சென்ற சில ஊழியரும் மாடியில் நின்று வேடிக்கைபார்த்துக் கொண்டிருந்தனர்.

'வடக்கு கிழக்கு மாகாணத்தின் நிர்வாகத்திலும் நீதிமன்றங்களிலும் சிங்களத்தைத் திணிக்கும் அரசாங்கத்தின் செய்கையை எதிர்த்து' தமிழரசுக்கட்சி ஆரம்பித்துள்ளநேரடி நடவடிக்கையின் இரண்டாவது அம்சமான 'மறியல் இயக்கம்' இன்று காலை 7-30க்குயாழ்ப்பாணம் கச்சேரி வாசலில் ஆரம்பமானது.

யாழ்ப்பாணத்தின் நிர்வாகத்தில் சிங்களத்தைப் புகுத்தும் காரியாலயங்கள் முன் மறியல் செய்யப்படும் என்று தமிழரசுக்கட்சி முன்னர் அறிவித்திருந்தது.

இன்று காலை சுமார் 7-30க்கு தமிழரசுக்கட்சியின் தலைமைக் காரியாலயத்திலிருந்து சுமார் நூறு தொண்டர்கள் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் ஊர்வலமாக கச்சேரிக்குப் புறப்பட்டுச் சென்றது.

கச்சேரியை ஊர்வலம் அடைந்ததும் திரு. செல்வநாயகம் கச்சேரியின் பிரதான வாசலில் நின்றர். இதரதொண்டர்கள் வரிசையாக கச்சேரியின் வாசலை மறைத்தபடி நின்றனர்.

காலையில் வேலைக்கு வந்த ஊழியர்களை உட்செல்லாதவாறு தொண்டர்கள் வாசலை மறித்து நின்றனர்.

சில உத்தியோகத்தர் உட்செல்ல முயற்சி செய்ததும் தொண்டர்கள் வாசலில் படுத்துக் கொண்டனர். கச்சேரியின் உள்ளே ஏற்கனவே இருந்த ஊழியர்கள் கூட வெளியே வரமுடியாது போய்விட்டது.

கச்சேரியின் சகல வாசல்களையும் மறித்து தொண்டர்கள் படுத்துக்கொண்டார்கள்.

### பொலீஸ் ஜீப் நுழைந்தது

கச்சேரியின் உள்ளே செல்வதற்காக காத்துநின்ற சில ஊழியர்களை உள்ளே விடுவதற்காக பொலிசார் வாசலில் படுத்திருந்த தொண்டர்களை இழுத்தெறிந்துவிட்டு வழிவிட்டுக் கொடுத்தது. பொலிசார் தொண்டர்களை இழுத்து எறிந்ததும் பொலிஸ் 'ஜீப்' உள்ளே நுழைந்தது.

இழுத்தெறியப்பட்ட தொண்டர்கள் மீண்டும் மீண்டும் வாசலில் படுத்துக்கொண்டனர். இழுத்தெறிய முடியாதவாறு தொண்டர்கள் ஒருவருடன் ஒருவர் நெருக்கியபடி படுத்துக் கொண்டனர்.

திரு. செல்வநாயகமும் வாசலில் உட்கார்ந்து கொண்டார்.

பொலிசார் தொண்டர்களை இழுத்தெறிந்து கொண்டிருந்த போது திரு. செல்வநாயகம் அமைதியாக வாசலில் நின்றர். திரு. செல்வநாயகத்தை ஒரு பொலிசார் வந்து கையை பிடித்து இழுத்தபொழுது அவர் பின்புறமாக விழ நேரிட்டது. ஆனல் மற்றெரு பொலிஸ் அதிகாரி ஓடிவந்து திரு. செல்வநாயகத்தை விழாமல் தடுத்துவிட்டார். எனினும் பின்புறமாகச்சாய்ந்ததிரு.செல்வநாயகம் சிறிது கஷ்டப்பட்டே எழுந்து நிற்க முடிந்தது.

### அமிர்தலிங்கமும் விழுந்து படுத்தார்

கச்சேரியில் வேலை பார்க்கும் ஓர் உயர்தர உத்தியோகத்தர் தொண்டர்களையும் தாண்டி உள்ளே செல்ல முயற்சித்த சமயம் வட்டுக்கோட்டை எம், பி. திரு. அமிர்தலிங்கம் தொண்டர்களுடன் சேர்ந்து அந்த உத்தியோகத்தர் முன் படுத்துக் கொண்டார். அந்த உத்தியோகத்தர் உள்ளே செல்ல முடியாது போய்விட்டது.

மற்றேர் உத்தியோகத்தர் பிரதான வாசலை வந்தடைந்ததும் பிரதம இன்ஸ்பெக்டர் டெனிஸ் அவரைப் பார்த்து "உள்ளே போகப்போகிறீர்களா?" என்று கேட்டார். அவர், "எனது காரியாலயம் பூட்டப்பட்டுள்ளது." என்று பதிலளித்தார். "இந்த வாசலால் போகிறீர்களா?" என்று கேட்டதற்கு அவர் போக மறுத்துவிட்டார்.

### கையில் காயம் சட்டை கிழிந்தது

தொண்டர்கள் பலரைப் பொலிசார் இழுத்தெறிந்ததனல் பலருக்கும் கை, முதுகு கால் ஆகிய இடங்களில் இரத்தக் காயம் ஏற்பட்டுள்ளது.

உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கத்தின் முழங்கை நிலத்தில் உராய்ந்ததால் காயமடைந்தது.

### தொண்டர்-பிரான்ஸிஸ்

நீர்கொழும்பிலிருந்து வந்து மறியல் இயக்கத்தில் கலந்து கொண்டிருக்கும் பிரான்ஸிஸ் என்ற தொண்டரைப் பொலிசார் அடிக்கடி இழுத்தெறிந்தனர். ஒரு பக்கத்தில் கிடந்த பிரான்சிசை இரு பொலிஸ்காரர் தூக்கி மற்றெரு பக்கத்துக்கு எறிந்தபோது அவர் எழுந்து நின்று இன்ஸ்பெக்டரைப் பார்த்து "எப்படித் தூக்கி எறிந்தாலும் இங்கிருந்து போகும் கடைசி ஆள் நான் தான்" என்று ஆங்கிலத்தில் கூறினர்.

### கிளிநொச்சி எம். பி.

கச்சேரி இருக்கும் பழைய பூங்காவின், சென்ஜோன்ஸ் கல்லூரிப் பக்கவாசலில் கிளிநொச்சி எம். பி. திரு. சிவசுந்தரம் மற்றும் சில தொண்டர்களும் உட்கார்ந்திருந்தனர்.

அரசாங்க அதிபரின் பங்களாவுக்குச் செல்லும் வாசலில் தொண்டர்கள் படுத்துக்கிடந்து சத்தியாக்கிரகம் செய்தனர்.

கச்சேரி ஊழியர்கள் பெரும் பாலோர் வீதியில் நின்று பார்த்துக்கொண்டிருந்தனர்.

## நிலம் குட்டி போடாது மீன் குட்டி போடும்

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதேபோன்று உழைத்து நல்ல இலாபம் பெறக்கூடிய முயற்சிகளிலும் படித்த உயர் குடி இளைஞர்கள் ஈடுபட்டாலென்ன? மக்களின் செல்வத்தையும் நாட்டின் வளத்தையும் நன்கு பெருக்கக்கூடிய இம் முயற்சியில் தம்பகுதி மக்கள் என்ருவது ஒருநாள் ஈடுபட வேண்டுமென்ற ஆசை இந் நாட்களில் பலருக்கு உண்டு.

### வழிவகைகள்

முதலீடு செய்து நாட்டின் வளத்தை உயர்த்த தயாராகவிருக்கும் பெரியோர்களுக்கும் இது ஒரு நல்ல வாய்ப்பு. பின் கூறப்பட்டுள்ள வழிவகைகளைப் பெரியோர்கள் ஆராய்ந்து பார்த்தல் அவசியம்.

1. படித்த இளைஞர்கள் ஆறு, ஆறு பேர்களாகச் சேர்ந்து தமக்குள் ஒருகூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

2. பின்னர் அவர்கள் ஆழ் கடலுள் சென்று மீன்பிடிப்பதற்கேற்ற படகு ஒன்றினை வாங்குவதற்கு முயற்சிசெய்தல் வேண்டும். அரசாங்கத்திடமிருந்தோ, அல்லது வேறு ஸ்தாபனங்களிலிருந்தோ கடன் வசதிகள்பெற உள்ள வழிவகைகளை நன்கு ஆராய வேண்டும்.

3. பின்னர் இவ் இளைஞர்கள் இத்தொழிலில் சிறிது பயிற்சி பெறவேண்டும். இதற்கு அனேக வசதிகளுண்டு என்றே நம்புகின்றேன்.

4. பெரியோர்கள் இவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு முன்வரவேண்டும்.

(அ) குளிர்சாதனவசதிகள்: மீன்பிடித்தல் பெரும் அளவில் நடக்கும் பகுதிகளில் பனிக் கட்டி உற்பத்தித் தொழிற் சாலைகளை நிறுவவேண்டும்.

(ஆ) மீன்களைத் துரிதமாக விற்பனை செயவதற்கேற்ற போக்குவரத்துச் சாதனங்களை அமைத்துக்கொடுக்கவேண்டும்.

(இ) தாழையடியை மையமாகவைத்து மீன் பிடித்தல் நடைபெறும் காலங்களிலாவது ரயில்வே குளிர்சாதன வசதிகள்கொண்ட பெட்டிகளைச் சேர்க்கவேண்டும். இத்தகைய ரயில் பெட்டிகள் நம்நாட்டில் இப்போது இல்லாவிடின் இவற்றைப் பெறுவதற்கான வழிவகைகளை அரசாங்கத்தோடும், இத்தொழில் வளர்வதில் ஊக்கம் கொண்டுள்ளோருடனும் உடனடியாக ஆராயவேண்டும்.

(ஈ) பிடிக்கப்பட்ட மீன்களில் ஒரு பகுதி இன்றும் உப்பிட்டு உலர்த்தப்பட்டேவருகின்றன. இய்ந்திர சாதனங்களுடன் இக்கால விஞ்ஞான முறையில் இத்தொழில் நடத்தக்கூடிய வழிவகைகளையும் ஆராயவேண்டும.

(உ) மீன்களைப் பதப்படுத்தி டப்பாக்களில் அடைத்து ஏற்றுமதி செய்ய வேண்டிய முயற்சிகளைப்பற்றியும் யோசித்தல்வேண்டும்.

### நமக்காக உலகம் காத்திராது

எல்லா முயற்சிகளும் இக்கால நிலைமைக்கேற்பத் துரிதமாகவும், சிக்கனமாகவும், சுத்தமாகவும், இயந்திரவசதிகளுடன் செய்யப்படல்வேண்டும். பழம்முறைகளிலேயே நாம் இயங்கிக்கொண்டிருந்தால், நமக்காக உலகம் காத்திராது. அதனுடன் சேர்ந்தே நாமும் நமது பழக்கவழக்கங்களைமாற்றிக்கொள்ளவேண்டும்.

நம்முன்னேர்கள் ஏதோ ஒரு காலத்தில் மரவுரியையே ஆடைகளாக அணிந்திருக்கக் கூடும். ஆனல் நாங்கள் அங்ஙிலையிலே இன்றில்லை. விதவிதமான ஆடைகளை உற்பத்தி செய்து அணிந்து மகிழ்கின்றேம். மாறுதல்கள் சமுதாயத்தில் ஏற்பட்டுக்கொண்டுதானிருக்கின்றன. இத்தகைய நயம் உள்ள மாறுதல்களைத் துரிதப்படுத்த நம் இளைஞர்களும், பெரியோர்களும் முன்வருவார்களா என்பதுதான் இன்றைய கேள்வி. நமது பொருளாதார நிலை வெகுவாகச் சீர்குலைந்த பிறகு தான் இம்முயற்சியில் நம் மக்கள் ஈடுபடுவார்கள் என்பதிற் சந்தேகமில்லை.

ஆனல் இன்று இத்தகைய முயற்சிகளில் துணிந்து இறங்குவோர் நாட்டுப்பற்றுடைய பெரும் மக்கள் என்பதில் கருத்துவேறுபாடில்லை. தியாகமும் சீலமும் தன்னலமற்ற வாழ்வும் நம்மக்களுக்கு இயல்பாகவே அமைந்த பண்பு. அவற்றை எல்லாம் நாடு நலமடைய உபயோகப்படுத்த வேண்டிய நிலைமை இன்று ஏற்பட்டுவிட்டது. மக்கள் வாய்ப் பேச்சுடன் நின்றுவிடாது செயலில் இறங்குவார்களா, என்ன?

## காயமடைந்தனர்

யாழ்ப்பாணம் செவ்வாய்

நேற்று நடைபெற்ற மறியல் இயக்கத்தின் விளைவாக 43 தொண்டர்கள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர். இவர்களில் பலருக்கு கடுமையானகாயம்ஏற்பட்டது.

13 பொலிஸ்காரர்களும் 3 பொலிஸ் அதிகாரிகளும் சிறு காயங்களுக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.